

# இல்லறம் எனும் நல்லறம்


தொகுப்பு :

**CA K.இளங்கோவன் B.Sc., F.C.A.,**

சேலம் – 7

என்னை வளர்த்து ஆளாக்கி வழிகாட்டிய
என் தாய் தந்தைக்கும் என் முன்னேற்றத்திற்கு
பேருதவி புரிந்த அனைத்து நல் இதயங்களுக்கும்
இந்நூல் சமர்ப்பணம்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு' - குறள்

**CA K. ILANGOVAN, B.Sc., F.C.A.,**
126/106 Rajiv Gandhi Road,
Sankar Nagar,
Salem - 636 007.

Ph : 0427 - 2413367
2415374
94432-65374

அன்புடையீர்!

வணக்கம். என்னுடைய மூன்றாவது படைப்பான **“இல்லறம் என்னும் நல்லறம்”** எனும் இந்நூலினை தங்களின் கைகளில் தவழச் செய்வதில் மீண்டும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நான் படித்த, கேட்டறிந்த செய்திகளைக் கோர்வையாக்கி எல்லோருக்கும் மிகுந்த பயனளிக்கும் வண்ணம் இந்நூலினை தந்துள்ளேன். இந்நூலினைப் படித்த அனைவரும் பயனடைந்தார்கள் என்றால் தான் இந்நூல் முழுப்பயனும் அடைந்ததாக அர்த்தம்.

நன்றி.

அன்புடன்
என்றும் உங்கள்
**CA K.** இளங்கோவன்

**CA K. ILANGOVAN, B.Sc., F.C.A.,**
126/106 Rajiv Gandhi Road,
Sankar Nagar,
Salem - 636 007.

Ph : 0427 - 2413367
2415374
94432-65374

இந்நூலின் பிரதி தேவைப்படுவோர் கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு பொது தர்ம ஸ்தாபனத்திற்கு ரூ. 200/– பணமாகவோ, டிராப்ட்டாகவோ, மணியார்டர் மூலமோ நன்கொடையாக அனுப்பி அதற்கான சான்றிதழை எனக்கு அனுப்பி வைத்தால் எனது செலவில் “இல்லறம் எனும் நல்லறம்” என்ற இந்நூலினை இலவசமாக அனுப்பி வைக்கிறேன்.

1. **திரு அருட்பிரகாச வள்ளலார் முதியோர் இல்லம்,**
   சன்னதி வீதி, தாரமங்கலம் – 636 502.
   சேலம் மாவட்டம்.

2. **‘நேசக்கரங்கள்–ஆதரவு ஏற்போர் இல்லம்’,**
   ஜட்ஜ் ரோடு,
   அய்யந்திருமாளிகை, சேலம்–636 008.
   போன் : 0427–2403101

3. **‘அன்பு இல்லம்’**
   சன்னியாசிகுண்டு மெயின்ரோடு,
   கிச்சிப்பாளையம், சேலம்–636015.
   போன் :

நீங்கள் அனுப்பும் இத்தொகை ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர் பசியினைத் தீர்க்க உதவட்டும்.

# பொருளடக்கம்


| | தலைப்பின் பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 1. | ஆன்மீகம் | 11 – 14 |
| 2. | தின வழிபாடு | 14 – 23 |
| 3. | நவக்கிரக துதிப்பாடல்கள் | 24 – 27 |
| 4. | அல்லல் நீங்கி ஆற்றல் பெற்றிட அபிராமி அந்தாதி பாடல்கள் | 28 – 32 |
| 5. | அல்லல் போக்கி ஆரோக்கியமாய் வாழ்ந்திட உதவும் தேவாரப் பதிகங்கள் – ஆரோக்கியமாய் வாழ்ந்திட | 33 – 34 |
| 6. | செல்வமும் உயர்வும் கிடைத்திட | 35 |
| 7. | தீராப்பிணிகள் மறைந்து நலமுடன் வாழ்ந்திட | 36 – 37 |
| 8. | குழந்தைச் செல்வம் பெற | 37 – 39 |
| 9. | சுகப்பிரசவம் நடந்திடவும், வீடு, மனை அடைந்திடவும் | 39 – 41 |
| 10. | தம்பதிகள் ஒற்றுமையுடன் வாழவும் குடும்பத்தில் ஒற்றுமை நிலவிடவும் | 41 – 42 |
| 11. | உணவும், உறக்கமும் சீராகப் பெற்றிடவும் மனக்கவலை நீங்கிடவும் | 43 –44 |
| 12. | குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவிட | 44 – 46 |
| 13. | கொடிய விஷயங்கள் நீங்கிடவும், அகால மரணம் ஏற்படாதிருக்கவும் | 46 – 47 |
| 14. | உடல் உறுப்புகள் யாவும் நலம் பெற! | 48 – 49 |
| 15. | சகல நோய்களும் நீங்க | 50 – 52 |
| 16. | பாவங்கள் போக்கிடும் ராதா தேவியின் அருள் கிடைக்க | 53 |
| 17. | காலையில் எழுந்திடுவோம்; கடவுளை நினைத்திடுவோம்! | 54 |
| 18. | எப்படியும் பிரார்த்தனை செய்யலாம்! | 55 |
| 19. | வணங்கித் தொழுதிடுவோம் | 56 |
| 20. | உலகை வசமாக்கலாம் | 57 |

| | | |
|---|---|---|
| 21. | தெய்வமும், பலன்களும் ............................................. | 58 |
| 22. | பேரைச் சொல்லுங்கள் பேறெல்லாம் பெறுங்கள் ............... | 59 |
| 23. | பெயரைச் சொன்னால் போதும் பேறெல்லாம் தேடிவரும் . | 60 |
| 24. | கந்தன் அருள் கிட்டிட ............................................. | 60 |
| 25. | ஒருநாளும் தாழ்வு இல்லை ............................................. | 62 |
| 26. | மாதவனை தியானிப்போம் ............................................. | 62 |
| 27. | நலம் தருவார் நாராயணன் ............................................. | 63 |
| 28. | பலன் தரும் ஸ்லோகம் ............................................. | 64 |
| 29. | வரமளிக்கும் எட்டு இலக்குமிகள் ............................................. | 65 |
| 30. | வெற்றி மீது வெற்றி வர, செல்வம் செழிக்க ........................ | 67 |
| 31. | நிறைந்த செல்வம் கிடைக்க வேண்டுமா ? ......................... | 68 |
| 32. | சுபிட்சம் வேண்டுமா ?, லட்சுமி கடாட்சம் கிட்டிட ........... | 69 |
| 33. | திருமகள் திருமந்திரம், சரஸ்வதி அருள் கிட்டிட ............. | 71 |
| 34. | ஐந்து சக்திகள் ............................................. | 73 |
| 35. | அம்மன் அருள் வேண்டுமா ?, கல்வி, செல்வம், ஞானம் பெற ............................................. | 74 |
| 36. | சிவயோக சாரம் ............................................. | 76 |
| 37. | நின்ற திருத்தாண்டகள் (உருத்திர தாண்டகம்) ................ | 77 |
| 38. | பராசக்தி போற்றி ............................................. | 80 |
| 39. | கோயில்களில் வழிபடும் முறை ............................................. | 82 |
| 40. | கோயிலில் சிறிது நேரம் உட்கார்ந்து வருவதன் பொருள் . | 85 |
| 41. | பிரதோஷ பிரார்த்தனைப்பாடல், வாஸ்து அம்சங்கள், துன்பம் நீங்க ............................................. | 86 |
| 42. | எளிமையானமந்திரம், ஐந்தெழுத்தின் பெருமை ................ | 88 |
| 43. | ஆறுபடை வீடும் ஆறு ஆதாரங்களும் ............................................. | 89 |
| 44. | வீடு நலம் பெற விளக்கேற்றுவோம் ............................................. | 90 |
| 45. | திருவிளக்கு துலக்க வேண்டிய தினங்கள், தீபம் ஏற்றுதல் ............................................. | 92 |

46. குத்து விளக்கு ஏற்றும்போது கவனிக்க, திருமணம் நடைபெற ........ 93
47. பெண்களுக்குத் திருமணம் விரைவாக நடக்க ........ 94
48. திருமணம் விரைவில் கைகூட தரிசிக்க வேண்டிய தலங்கள் ........ 96
49. பிரதோஷ காலத்தில் ஆண் பெண் இருவரும் கீழ்வரும் பாடலை பக்தியுடன் சொல்லி வந்தால் விரைவில் திருமணம் நடக்கும் ........ 97
50. குழந்தை வரம் வேண்டி ........ 98
51. சந்தான பாக்கியம் தரும் சந்தான கோபாலன்கள் ........ 99
52. சந்தான கோபால கிருஷ்ணன் சுலோகம், சுக பிரசவத்திற்கு ........ 101
53. நோய்களைத் தீர்க்கும் தலங்கள் ........ 102
54. செய்ய வேண்டியவையும், செய்யக் கூடாதவையும் ........ 104
55. பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகள் ........ 108
56. இனிய இல்லறம் அமைய ........ 109
57. இல்லற வாழ்க்கை செழிக்க ........ 111
58. நித்திய பிரார்த்தனை ........ 114

<u>உபயோகமான வீட்டுக்குறிப்புகள்</u>

59. உணவுப் பொருட்கள் வீணாகாமல் பாதுகாக்க ........ 115
60. துணிகளை பாதுகாக்கவும், பராமரிக்கவும் ........ 125
61. கறைகளை நீக்க ........ 128
62. வீட்டிலும், பயன்படுத்தும் பொருட்களிலும் மணம் வீச ... 131
63. மின்சாரத்தையும் எரிபொருளையும் மிச்சப்படுத்த ........ 133
64. சமையலறைக் குறிப்புகள் ........ 135
65. வீட்டில் பயன்படுத்தும் பொருட்களை பராமரிப்பதும்,...... பாதுகாப்பதும் ........ 152
66. வீட்டுத் தோட்டத்தையும், பூச்செடிகளையும் பராமரிக்க 156
67. வீட்டைப் பராமரிக்க, பாதுகாக்க ........ 158

68. குழந்தை வளர்ப்பும், பாதுகாப்பும் ........................................ 161
69. இதர உபயோகமான குறிப்புகள் ........................................ 162
70. பயணக்குறிப்புகள் ........................................ 179
71. நகைகளைப் பாதுகாப்பாக, பராமரிக்க ........................................ 180
72. உடல் நலம் பேண உயர்வான முறைகள் ........................................ 182
73. பாத்திரங்களை பராமரிக்க ........................................ 184
74. சமையல் கேஸை மிச்சப்படுத்த, பாதுகாப்பாக இருக்க 185

**<u>வாழ்வியல்</u>**

75. அன்றாட வாழ்வில் ........................................ 187
76. உடம்பை ஃபிட்டாக வைக்க ........................................ 188
77.. உடலும் மனமும் ஆரோக்கியமாக இருக்க ........................................ 190
78. ஆரோக்கியத்துடன் திகழ அருமையான 15 வழிகள் ...... 192
79. டென்ஷனைக் குறைக்கும் வழிகள் ........................................ 194
80. விலைவாசி உயர்வை சமாளிக்க ........................................ 196
81. ஷாப்பிங் செல்லும் முன் ........................................ 197
82. நேரத்தை நிர்வகிக்க தெரிந்தால் வெற்றி நிச்சயம் ......... 199
83. என்றும் இளமையாகவும் மகிழ்ச்சியாகவும் திகழ ............ 201
84. நீங்களும் அழகாகத் திகழ ........................................ 202
85. சிறந்த தாயாக திகழ ........................................ 203
86 குழந்தைகள் நற்குணங்களுடன் வளர ........................................ 204
87. குழந்தைகள் நலனில் ........................................ 205
88. சமூக விரோதிகளிடமிருந்து குழந்தைகளைக்காப்பாற்ற 205
89. பெற்றோர் / பிள்ளைகள் கவனத்துக்கு ........................................ 208
90. தனிமை – வெறுமை அல்ல ........................................ 209
91. மன நிறைவான வாழ்க்கை ........................................ 211
92. உன்னதமான வாழ்வியல் நெறிகள்,
வெற்றி உங்கள் வசப்பட ........................................ 212
93. வெற்றிகள் நாடி வர ........................................ 213

94. வெற்றிக்கு 20 வழிகள் ........ 214
95. தோல்வி எனப்படுவது யாதெனின்,
அதிர்ஷ்டத்தை அழைக்க ........ 215
96. மெல்லத் திறக்கட்டும் மனது ........ 216
97. வாழ்க்கையில் வெற்றி பெற ........ 218
98. உங்கள் லட்சியங்களில் வெற்றி பெற ........ 225
99. வாழ்வாங்கு வாழ ........ 226
100. ஒவ்வொரு நாளும் புதிய நாளே,
வாழ்க்கையில் முன்னுக்கு வர ........ 227
101. வாழ்க்கைக்கு ஆறு கட்டளைகள் ........ 228
102. வாழ்க்கையை இனிமையாக வைத்துக்கொள்ள ........ 230
103. சந்தோஷப் பூக்கள் பூத்துக் குலுங்க ........ 232
104. வாழ்வில் வெற்றி காண ........ 233
105. வாழ்க்கையில் வெற்றி அடைய ........ 235
106. வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க ........ 235
107. வாழ்க்கையில் வெற்றி பெற சில வழிகள் ........ 236
108. மகிழ்ச்சிக்கு சில வழிமுறைகள் ........ 238
109. அதிர்ஷ்டத்துக்கு 13 வழிகள் ........ 240
110. பிரச்சனைகளே வாழ்க்கையின் சிற்பி ........ 242
111. சாதிக்க விரும்புவர்களுக்கு ........ 243
112. எந்த சூழலிலும் ஜெயிக்க ........ 244
113. வாழ்க்கைப் பாடங்கள் ........ 245
114. வாழ்க்கையை மகிழ்ச்சிகரமானதாக ஆக்க ........ 246
115. மகிழ்ச்சியான வாழ்க்கைக்கான ஐந்து ரகசியங்கள் ........ 249
116. உண்மையானமகிழ்ச்சி ........ 250
117. நிம்மதிக்கு மூன்று மந்திரம், வாழ்வும் வளமும் ........ 252
118. வாழ்க்கை, வாழ்க்கை வளம் பெற ........ 253
119. கடமையைச் செய் ........ 254

**<u>இனிய இல்லறம்</u>**


120. அன்பு மலரட்டும் ........ 255

121. மனதில் நிலைத்து நிற்க வேண்டுமா ? ........ 256

122. வாழ்வு வசந்தம் பெற ........ 257

123. சந்தோஷமான வாழ்க்கையில் பெண்கள் ........ 260

124. கணவரை சந்தோஷப்படுத்த ........ 263

125. குடும்ப வாழ்வில் அன்பைச் சேமிக்கும் வழிகள், குடும்ப வாழ்வில் அன்பை முறிக்கும் விஷயங்கள், சந்தேகக் கோடு – அது சந்தோஷக் கேடு ........ 266

126. கணவன் மனைவி இடையே பிரச்னை ஏற்படாமல் இருக்க ........ 267

127. பெருகி வரும் விவாகரத்துகள் – சமுதாய சீரழிவு ........ 268

128. திருமண பந்தங்கள் முறிவது ஏன் ? ........ 270

129. விட்டுக் கொடுத்து வாழ்வதில் தவறில்லை ........ 272

130. திருமண வாழ்க்கை சலிப்பை விரட்ட ........ 274

131. தாம்பத்தியம் இனிக்க ........ 275

132. மகிழ்வான தாம்பத்தியம் ........ 276

133. காதல் கோட்டையின் மந்திரச்சாவி ........ 278

134. உறவுகள் தழைக்க மூங்கிலாக வேண்டாம் – நாணலாக இருப்போம் ........ 282

135. பயமற்ற அன்பு – நிலையான உறவு ........ 284

136. மகிழ்ச்சியான குடும்பத்திற்கு 10 வழிகள் ........ 286

137. இல்லறம் எனும் நல்லறம் ........ 286

138. உலக நல வாழ்த்து ........ 289


– – –

# ஆன்மீகம்

## விநாயகர் வழிபாடு

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்!

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே.

## முருகன் வழிபாடு

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மான பொருள் நீ அருளல்வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## ஐயப்பன் வழிபாடு

அரிகர புத்ரனை ஆனந்த ரூபனை
இரு மூர்த்தி மைந்தனை அறுமுகன தம்பியை
சபரகிரிசனை சாந்த ஸ்வரூபனை
தினம் தினம் போற்றிப் பணிந்திடுவோமே!

## சிவன் வழிபாடு

பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேனெங்கெழுந்
தருளுவ தினியே.

## சக்தி வழிபாடு

மஞ்சளாடை யுடுத்தி மானுறு மணிகள் பூண்டு
அஞ்சலென்று அபயம் காட்டி அரியதோர் வில்லும் கொண்டு
உக்கிர வடிவத்தோடு உயர்சூலம் கரத்தே தாங்கும்
துர்க்கையே பரமேஸ்வரியே துணையெனத் தொழுதோம் யாமே!

## விஷ்ணு வழிபாடு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக்காப்பு.

## மகாலட்சுமி வழிபாடு

உலகளந்த திருமாலின் வலமார்பில் உறைபவளே!
    உலகமெல்லாம் காத்து நிற்கும் தேவி மகாலட்சுமியே!
உலகெங்கும் ஆட்சி செய்யும் அஷ்டலட்சுமியே!
    நிலையான அருட்செல்வம் அருள்பவளே!
உன்பாதம் சரணடைந்தோம் நலம் தருவாய் அம்மா!

## சரஸ்வதி வழிபாடு

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உயர்விக்கும் என்னம்மை – தூய
உருப்பளிங்கு போல் வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பள்இங்கு வாராது இடர்.

## தட்சிணா மூர்த்தி வழிபாடு

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்
                                        பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத்
                                    தொடக்கை வெல்வாம்.

## நந்தி தேவர் வழிபாடு

அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
தங்குரு மரபிற்கெல்லாம் முதற்குரு நாதனாகிப்
பங்கயத் துளவம் நாறும் வேத்திரப்படை பொறுத்த
செங்கை எம்பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி.

### ஆஞ்சநேயர் வழிபாடு

வஞ்சனை பில்லி சூனியம் மற்றலர் ஏவல் பேய்கள்
அஞ்சியே ஓடச்செய்யும் ஐயனே ஆரணங்கள்
கொஞ்சும் புன்னகை குளிரும் குளிர்முகக்கவி எங்கோவே
அஞ்செழுத்தாஞ்சனேய அனுமனே போற்றி போற்றி!

# தின வழிபாடு

## ஞாயிற்றுக்கிழமை

### விநாயகர் வழிபாடு

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும் பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

### திருமால் வழிபாடு

திங்கள் செவ்வாயிலுன் திருவமு தருந்தினால்
தீராத வினை தீருமே
பொங்கு புதன் வியாழனில் பூஜை செய்தால்
பூர்வ பாவம் நீங்குமே
மங்கலம் வெள்ளி சனி ஞாயிறில் உன்னையே
மனது வைத்தால் இன்பமே
மங்காத மாதமே வருஷம் சகாப்தமே
மகராஜ திருமால் சுகமே!

## முருகன் வழிபாடு

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே தொழுவேன் நான்.

## சக்தி வழிபாடு

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை, அங்கையிற் பாசாங்குசமும் கரும்பு, வில்லும்
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு
ஒரு தீங்கு இல்லையே.

## சிவன் வழிபாடு

போற்றியோ நமச்சிவாய! புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சிவாய! புகலிடம் பிறிது ஒன்றுஇல்லை
போற்றியோ நமச்சிவாய! புறம் எனைப் போக்கல்கண்டாய்
போற்றியோ நமச்சிவாய! சயசய போற்றி! போற்றி !

# திங்கள் கிழமை

## விநாயகர் வழிபாடு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## ஆஞ்சநேயர் வழிபாடு

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே
ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர் காகஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு
அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன்
அளித்துக் காப்பான்.

## முருகன் வழிபாடு

நாளென் செயும் வினைதானென் செயுமெனை
நாடிவந்த
கோளென் செயுங் கொடுங்கூற்றென் செயுங்
குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்
சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து
தோன்றிடினே.

## சக்தி வழிபாடு

கருத்தன எந்தை தன்கண்அன, வண்ணக்
கனவெற்பிற்
பெருத்தென, பால் அழும்பிள்ளைக்கு நல்கின,
பேர் அருள்கூர்
திருத்தன, பாரமும் ஆரமும் செங்கைச்
சிலையும் அம்பும்
முருத்து அனமூரலும் நீயும் அம்மே வந்து
என்முன் நிற்கவே.

### சிவன் வழிபாடு

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே!

## செவ்வாய்க் கிழமை

### விநாயகர் வழிபாடு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்று கின்றேனே.

### இராமன் வழிபாடு

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம வென்றிரண்டெழுத்தினால்.

### முருகன் வழிபாடு

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## சக்தி வழிபாடு

உதிக்கின்ற செங்கதிர்! உச்சித்திலகம்
    உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் : மாதுளம்போது!
    மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி! மென்கடிக் குங்கும
    தோயம்என்ன
விதிக்கின்ற மேனி! அபிராமி எந்தன்
    விழித்துணையே.

## சிவன் வழிபாடு

நம்மானம் மாற்றி நமக்கருளாய் நின்ற
பெம்மானைப் பேயுடன் ஆடல் புரிந்தானை
அம்மானை அந்தணர் சேரும் அணிகாழி
எம்மானை ஏத்தவல் லார்க்கு இடர் இல்லையே.

# புதன் கிழமை

## விநாயகர் வழிபாடு

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம்; போகாத் துயரம்போம் நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தில் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

## ஸ்ரீ ரெங்கநாதர் வழிபாடு

ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனை நான்
இன்று மறப்பனோ? ஏழைநான் – அன்று
திருவரங்கத்துள் கிளந்து கை தொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை.

## முருகன் வழிபாடு

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா வென்றோது வார்முன்.

## சக்தி வழிபாடு

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து
    கிளர்ந்து ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கு இடமே!
    எண்ணில் ஒன்றுகில்லா
வெளியே! வெளி முதற் பூதங்களாகி
    விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது
    அதிசயமே!

## சிவன் வழிபாடு

சிவனோ டொக்குந் தெய்வந் தேடினுமில்லை
அவனோ டொப்பாரிங்கு யாவருமில்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

# வியாழக் கிழமை

## விநாயகர் வழிபாடு

விநாயகனே வல்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## கண்ணன் வழிபாடு

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்க்
        கமலச்செங்கண்
அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம்
        கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான்போய்
        இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
        அரங்கமாநகருளானே.

## முருகன் வழிபாடு

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் – வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

## சக்தி வழிபாடு

நாயகி, நான்முகி, நாராயணி கைநளினபஞ்ச
சாயகி, சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆய, கியாதியுடையாள் சரணம் அரண்நமக்கே.

## சிவன் வழிபாடு

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லாமல் இனியாரை நினைக்கேனே.

# வெள்ளிக் கிழமை

## விநாயகர் வழிபாடு

மங்களத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா
பொங்குதன வயிற்றோனே பொற்புடைய ரத்தினனே
சங்கரனார் தருமதலாய் சங்கடத்தைச் சங்கரிக்கும்
எங்கள் குலவிடிவிளக்கே எழில்மணியே கணபதியே.

## ஐயப்பன் வழிபாடு

தாய் மடியைத் தேடியங்கே
தாவிவரும் கன்றுகளாய்
வாய்திறந்து பாடிவந்தோம் ஐயப்பா! உன்
வாசலுக்கே ஓடிவந்தோம் ஐயப்பா
நீ யிருக்க உனது மக்கள்
யார்முகத்தில் போய்விழிப்போம்!
சேய் முகத்தைப் பாராயோ ஐயப்பா! உன்
திரு வருளைத் தாராயோ ஐயப்பா!

## முருகன் வழிபாடு

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னே ஒருவரையான் பின்செல்லேன் பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே!

## சக்தி வழிபாடு

துணையும் தொழுந்தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்பூங்
கணையும் கரும்பும் சிலையும் மென் பாசாங்குசமும் வகயில்
அணையுந் திரிபுர சுந்தரியாவது அறிந்தனமே.

### சிவன் வழிபாடு

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

## சனிக் கிழமை

### விநாயகர் வழிபாடு

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

### திருவேங்கடவன் வழிபாடு

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோவிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேன்.

### முருகன் வழிபாடு

காக்கக் கடவியநீ காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் ஆறுமுகவா! பூக்குங்
கடம்பா! முருகா! கதிர்வேலா! நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

## சக்தி வழிபாடு

வந்திருப்பவர் உன்னை வானவர் தானவர் :
　　ஆனவர்கள்
சிந்திப்பவர் நல்திசைமுக நாரணர் :
　　சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப்பரமானந்தர் :
　　பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டி! நின்தண்
　　அளியே!

## சிவன் வழிபாடு

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
　　குமிண் சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியில்
　　பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும்
　　காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமா
　　நிலத்தே.

---

# நவக்கிரக துதிப்பாடல்கள்

## 1. சூரிய பகவான்

சீரருள் மிகச்சுரந்து செகத்துயிர் அனைத்தும் காக்கப்
பேரருள் பிதாவுமாகிப் பெருந்துன்ப இருளையோட்டிக்
காரருள் சுகத்தை நல்கக் கதிர்களாயிரம் பரப்பும்
பாரருள் பரிதிப்புத்தேள் பதமலர் சென்னி வைப்பாம்!

## 2. சந்திர பகவான்

செழித்திடச் செல்வம் நல்கிச் செகத்துள உயிர்கட்கெல்லாம்
வழித்திடும் பிதாவுமாகி வல்லிருள் தன்னை யோட்டித்
தழைத்திட அமுதமாகத் தக்கதோர் கதிர்பரப்பிப்
பொழிந்திடும் சோமநாதன் பொற்பதம் தலைக்கொள்வோமே.

## 3. அங்காரக பகவான்

வெற்றியும் வீரம் ஆண்மை விதரணம் பராக்கிர மங்கள்
சுற்றமாம் தீரம் நல்கிச் சோதரன் தானுமாகிப்
பற்றிய பூமியின்பம் பரபிரு தான்னியம் ஓங்கி
எற்றிசைப்புகழும் சேயின் இருபதம் தலைக்கொள்வோமே!

## 4. புதன் பகவான்

இணைக்கமாம் மகிழ்ச்சி இன்பம் இயலுறும் புத்தியுக்தி
வணக்கமாம் கல்வி மேன்மை வரும் தனம் மகிழ்ச்சி புண்யம்
துணக்கமாம் பந்துவாகித்து லங்கிடச் சுகங்கள் நல்கும்
கணக்கனாம் எந்தை பரதம் கழலடி சென்னி வைப்பாம்!

## 5. குரு பகவான்

பெருநிறை செல்வம் மேன்மை பெற்றிடும் சுகம் கல்யாணம்
வருநிறை மரபு நீடி வாய்க்கும் சந்ததி தழைக்கத்
தருநிறை ஆடை ரத்னம் தான்பெற அருளும்தேவ
குருநிறை வியாழன் பொற்றாள் குரைகழல் தலைக்கொள்வோமே!

## 6. சுக்கிர பகவான்

திரைகடல் சூழும் பூமி சேர்ந்திடும் உயிர்கட்கெல்லாம்
நிறைதரும் யோக போகம் நீடிய மனைவி இன்பம்
தரைபுகழ் வாகனங்கள் தக்கதோர் சுகத்தை நல்கும்
மறைமொழி புகரின் பொற்றாள்மலரடி தலைக்கொள்வோமே!

## 7. சனி பகவான்

கோரிய உலகத்தின் கண்குலவிய உயிர்கட்கெல்லாம்
மீறிடச் சுகமளித்து மெய்தளர் பிணியை நீக்கிச்
சீறிய துன்பம் தீர்ந்து சிறக்கத் தீர்க்காயுள் நல்கும்
காரியின் கமலபாதக்கடிமலர் தலைக்கொள்வோமே!

## 8. இராகு பகவான்

பணியென உருவம் ஆகிப் பட்சமாய் அமுதம் உண்டு
தணியென உயிர்கட்கெல்லாம் தகும்படி யோகபோகம்
துணிவுடன் அளித்து நாளும் துலங்கிட இன்பம் நல்கும்
மணமுறும் இராகு பொற்றாள் மலரடி   சென்னிவைப்பாம்!

## 9. கேது பகவான்

மாதுமை பாகன் சொற்ற வரத்தினால் அமுத பானக்
கேதுவும் உடையனாகி எவ்வுயிர்களும் தழைக்கக்
கோதிலா ஞானம் மோட்சம் குருபக்தி, அருளும் நல்கும்
கேதுவாம் பகவன் பாதம் கிளர்முடிமிசைக் கொள்வோமே!

மனிதர்களாகப் பிறந்தவர்கள் அவரவர் வினைப்பயனை அனுபவித்தே தீரவேண்டும். நவக்கிரகங்களைத் தரிசிப்பதாலும், பரிகாரங்கள் செய்வதாலும், வினைப்பயனைத் தாங்கும் பக்குவம் மட்டுமே கிடைக்கும். வினையின் வேகம் கொஞ்சம் குறையும். மற்றபடி முழுமையாகத் தவிர்ப்பது முடியாத செயல்.

---

## நவக்கிரகங்கள் அனைத்தும் இணைந்த பாடல்

கீழ்க்கண்ட பாடலில் நவக்கிரகங்கள் ஒன்பதின் பெயர்களும் அமைந்துள்ளன. இப்பாடலைத் தினமும் துதித்து வந்தால் நவக்கிரகங்கள் நமக்கு நல்லதை வழங்கும்.

சூரியன், சோமன், செவ்வாய்
சொற்புதன், வியாழன், வெள்ளி,
காரியும் இராகு, கேது
கடவுளர் ஒன்பா னாமத்
தாரியல் சக்க ரத்தைத்
தயவுடன் பூசித் தாலும்
பாரினில் செல்வம் உண்டாம்!
பாக்கியம் நல்கும் தானே!

---

## சூரியனை வணங்குவோம்

பின்வரும் பாடலைச் சொல்லி தினந்தோறும் சூரியனை வணங்க எல்லா நலன்களும் எளிதில் கிடைக்கும்.

‘பேசிடும் வெண்தாமரை ஆசனன் ஆகிச் சிவந்த
பேரொளிசே தருவிருத்த மண்டல மத்தியனாய்
ஆசறு மாதுளங்க மலர் போலும் நிறத்தினனாய்
அலர்ந்தனவாய் இருபுயங்கள் அடர்ந்த வெண்தாமரையின்

காசறு நாளம்பிடித்த கையிரண்டி னோடு
கருதுமொரு முகமிரண்டும் கைகளையுடையவனாய்த்
தேசுமலி செய்ய உடை தனையுடைத்தோனாகி
திகழ்சிவ சூரியனை நிதம் சிந்தனை செய்திடுவாம்'

'காசினி இருளை நீக்கும் கதிரொளியாகி எங்கும்
பூசுர உலகோர் போற்றப் பொசிப்புடன் சுகத்தை நல்கும்
வாசியே ழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா எனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி.

---

## சனி பகவான் நமக்கு இனிய பலன்கள் வழங்க எளிய பரிகாரங்கள்...

- சனி ஆதிக்கக் காலங்களில் சனிக்கிழமை விரதமிருந்து சனீஸ்வரருக்கு அர்ச்சனை செய்து வழிபடலாம். அர்ச்சனைப் பொருட்களை விநியோகம் செய்வதுதான் யோகம்.
- தினமும் காலையில் எள் கலந்து சாதத்தைக் காகத்திற்கு வைக்கலாம். கருப்பு எள் கலந்து வைப்பது மிகவும் நல்லது.
- சனீஸ்வரர் முன்னிலையில் ஜோடி தீபம் ஏற்றி வழிபட்டு வரலாம். தீபம் போடுவதற்கு நல்லெண்ணெய் உகந்தது.
- ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் ஊற்றி அதில் முகம் பார்த்து தானம் கொடுக்க வேண்டும்.
- அனுமன் சந்நிதியில் விளக்கேற்றி வழிபட்டு வருவதும் நல்லது.
- விநாயகப் பெருமான் சந்நிதியில் பசுநெய் விளக்கேற்றி வழிபட்டு வருவது நல்லது.
- உடல் குறைபாடு உள்ளவர்களுக்கு அன்னதானம் வழங்கியும் சனியின் அருளைப் பெற இயலும்.

இங்ஙனம் எளிய பரிகாரங்களைச் செய்து இனிய பலன்களைப் பெற இயலும்.

---

# அல்லல் நீங்கி ஆற்றல் பெற்றிட
# அபிராமி அந்தாதி பாடல்கள்

## கலைகளில் வல்லமை பெற

கண்களிக் கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகிமதங்கர் குலப்
பெண்களிற் தோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே.

## தொல்வினைகள் தொலைந்து போக

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருள் ஏதும் இன்றி ஒளிவெளியாகியிருக்கும் உன்றன்
அருள் ஏது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே.

## வறுமை நீங்க

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்றன்மெய்யருளே.

## கடன் தொல்லைகள் நீங்க

இல்லாமை சொல்லி ஒருவர்தம்பால் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர் தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

## செய்தொழில் செழிக்க

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணமும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவதே.

## மனக்குறை தீர்ந்து மகிழ்ச்சி பொங்க

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத் தாள் பனி மாமதியின்
குழவித் திருமுடிக்கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ் சேயிரங்கேல் உனக்கென் குறையே.

## நிலையான மனமகிழ்ச்சி உண்டாக

கூட்டியவா என்னைத் தன்னடியாரில் கொடியவினை
ஓட்டியவா என் கண் ஓடியவா தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.

## எத்தகைய அச்சமும் அகல

தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி மோகனச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே.

## அடுத்தடுத்து வரும் துன்பங்கள் நீங்க

அன்றே தடுத்(து) என்னை ஆண்டு கொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்(கு) இனி நான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே;
ஒன்றே! பலவுருவே அருவே! என் உமையவளே!

## குடும்பக் கவலையிலிருந்து விடுபட

அறிந்தேன் எவரும் அறியா மறையே அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திரு வேவெருவிப்
பிரிந்தேன் நின் அன்பர் பெருமை எணணாத கரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே

## நோய்கள் விலக

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே.

## கன்னியர்களுக்கு நல்ல வரன் அமைய

அதிசயமான வடி உடையாள் அரவிந்த மெல்லாம்
துதியச ஆனன சுந்தரவல்லி துணை இரதி
பதிசயமான(து) அபசயமாக முன் பார்த்தவர்தம்
மதியசமாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.

## திருமணம் நிறைவேற

திங்கட் பசுவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்துமோ ? தரங்கக் கடலுள்
வெங்கட பணியணை மேல் துயில்கூரும் விழுப்பொருளே.

## குழந்தை பேறு உண்டாக

தாமம் கடம்பு; படைபஞ்ச பாணம்; தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக் கென்று வைத்த
சேமம் திருவடி, செங்கைகள் நான்கு; ஒளி செம்மையம்மை;
நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே.

## பிள்ளைகள் நல்லவர்களாக வளர

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன்; ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்கு அலராக நின்றாய்! அறியார் எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடியார், அடியார் பெற்ற பாலரையே.

## கணவன் மனைவி கருத்து வேற்றுமைகள் நீங்க

வருந்தா வகைஎன் மனத்தான மரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லை விண்மேவும் புரவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும மெல்லியலே.

## பிரிந்தவர் ஒன்று சேர

துணையும் தொழுந்தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப் பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமும் கையி
அணையும் திரிபுர சுந்தரிஆவ(து) அறிந்தனமே.

## நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும் புனலும் கனலும்வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சீரடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனமில்லையே

## இல்வாழ்க்கை இன்பமாய் அமைய

ஆனந்தமாய்என் அறிவாய் நிறைந்த அமுதமாய்
வானந்த மான வடிவுடையாள் மறைநான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே.

## எல்லா சுகங்களும் பெற

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின்புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

## சகல சௌபாக்கியங்களும் பெற

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

## தூய மனநிலை பெற

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே.

---

# அல்லல் போக்கி ஆரோக்கியமாய் வாழ்ந்திட உதவும் தேவாரப் பதிகங்கள்

## ஆரோக்கியமாய் வாழ்ந்திட

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள் இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே 1

வீதிபோக் காவன வினையைவீட் டுவ்வன
ஓதியோர்க் ககப்படாப் பொருளையோர் விப்பன
தீதில்தே வன்குடித் தேவர்தே வெய்திய
ஆதியந் தம்மிலா அடிகள்வே டங்களே. 2

மானமாக் குவ்வன மாசுநீக் குவ்வன
வானையுள் கச்செலும் வழிகள்காட் டுவ்வன
தேனும்வண் டும்மிசை பாடுந்தே வன்குடி
ஆனஞ்சா டும்முடி யடிகள்வே டங்களே. 3

செவிகளார் விப்பன சிந்தையுட் சேர்வன
கவிகள்பா டுவ்வன கண்குளிர் விப்பன
புவிகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அவிகளுய்க் கப்படும் அடிகள்வே டங்களே. 4

விண்ணுலா வுந்நெறி வீடுகாட் டுந்நெறி
மண்ணுலா வுந்நெறி மயக்கந்தீர்க் குந்நெறி
தெண்ணிலா வெண்மதி தீண்டுதே வன்குடி
அண்ணலான் ஏறுடை யடிகள்வே டங்களே. 5

பங்கமென் னப்படர் பழிகளென் னப்படா
புங்கமென் னப்படர் புகழ்களென் னப்படும்
திங்கள்தோ யும்பொழில் தீண்டுதே வன்குடி
அங்கமா றுஞ்சொன்ன அடிகள்வே டங்களே. 6

கரைதலொன் றும்மிலை கருதவல் லார்தமக்
குரையிலூ னம்மிலை உலகினின் மன்னுவர்
திரைகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அரையில்வெண் கோவணத் தடிகள்வே டங்களே. 7

உலகமுட் குந்திறல் லுடையரக் கன்வலி
விலகுபூ தக்கணம் வெருட்டும் வேடத்தின
திலகமா ரும்பொழில் சூழ்ந்ததே வன்குடி
அலர்தயங் கும்முடி யடிகள்வே டங்களே. 8

துளக்கமில் லாதன தூயதோற் றத்தன
விளக்கமாக் குவ்வன வெறிவண்டா ரும்பொழில்
திளைக்குந்தே வன்குடித் திசைமுக னோடுமால்
அளக்கவொண் ணாவண்ணத் தடிகள்வே டங்களே 9

செருமரு தண்துவர்த் தேர்அமண் ஆதர்கள்
உருமரு வப்படாத் தொழும்பர்தம் உரைகொளேல்
திருமரு வும்பொய்கை சூழ்ந்ததே வன்குடி
அருமருந் தாவன அடிகள்வே டங்களே. 10

சேடர்தே வன்குடித் தேவர்தே வன்றனை
மாடமோங் கும்பொழில் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன்
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே. 11

## செல்வமும் உயர்வும் கிடைத்திட

நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்கென்றும் இன்பமே. 1

அத்தன் முதுகுன்றைப் பத்தி ஆகி நீர்
நித்தம் ஏத்துவீர்க்குய்த்தல் செல்வமே. 2

ஐயன் முதுகுன்றைப் பொய்கள் கெடநின்று
கைகள் கூப்புவீர், வையம் உமதாமே. 3

ஈசன் முதுகுன்றைப் நேசமாகி நீர்
வாச மலர் தூவப் பாசவினை போமே. 4

மணி ஆர் முதுகுன்றைப் பணிவார் அவர் கண்டீர்
பிணி ஆயின கெட்டுத் தணிவார் உலகிலே. 5

மொய்யார் முதுகுன்றை, ஐயா என வல்லார்
பொய்யார் இரவோர்க்குச், செய்யாள் அணியாளே. 6

விடையான் முதுகுன்றை, இடையாது ஏத்துவார்
படை ஆயின சூழ, உடையார் உலகமே. 7

பத்துத் தலையோனைக் கத்த விரல் ஊன்றும்
அத்தன் முதுகுன்றை, மொய்த்துப் பணிமினே. 8

இருவர் அறியாத, ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள், பெருகி நிகழ்வோரே. 9

தேரர் அமணரும், சேரும் வகை இல்லான்
நேரில் முதுகுன்றை, நீர் நின்று உள்குமே. 10

நின்று முதுகுன்றை, நன்று சம்பந்தன்
ஒன்றும் உரைவல்லார், என்றும் உயர்வாரே. 11

## தீராப்பிணிகள் மறைந்து நலமுடன் வாழ்ந்திட

அவ்வினைக்கிவ்வினை ஆம்என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உம் தமக்கூனம் அன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம் 1

காவினை இட்டும் குளம் பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித்தீர் என்றிரு பொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம் 2

முலைத் தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலையா வணம் கொண்டெமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம் 3

விண் உலகாள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்றிரு போதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழல் அடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம் 4

மற்றிணை இல்லா மலைத் திரண்டன்ன திண்தோள் உடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும் தன்மை கொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம் 5

மறக்கும் மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்து அடிக் கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர்கொடு வந்து உமை ஏத்தும் பணி அடியோம்
சிறப்பில் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம் 6

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை ஏத்தும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்தருள் செய்தவரே
திருவில் இத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம் 7

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாது செய்து
தோற்றம் உடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் வினைத் தீண்டப் பெறா திருநீலகண்டம் 8

சாக்கியப் பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினைத் தீண்டப் பெறா திருநீலகண்டம் 9

பிறந்த பிறவியில் பேணிஎம் செல்வவன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர் கோன் அடிக்கண்
திறம் பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே 10

## குழந்தைச் செல்வம் பெற

கண்காட்டு நுதலானும் கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண் காட்டும் இசையானும் பயிர் காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடை காட்டும் கொடியானே 1

பேய்அடையா பிரிவு எய்தும் பிள்ளையினோடு உள்ள நினை
வாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேய் அன தோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே 2

மண்ணொடு நீர் அனல் காலோடாகாயம் மதிஇரவி
எண்ணில் வரும் இயமானன் இக பரமும் எண்திசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு சிறுமையுமாய் பேராளன்
விண்ணவர்கோன் வழிபட வெண்காடிடமா விரும்பினனே 3

விடம் உண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவில்
மடல் விண்ட முடத் தாழை மலர் நிழலைக் குருகென்று
தடம் மண்டு துறைக் கெண்டை தாமரையின் பூ மறையக்
கடல் விண்ட கதிர் முத்தம் நகை காட்டும் காட்சியதே. 4

வேலை மலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலை மலி வண்சாந்தால் வழிபடு நல் மறையவன்தன்
மேல்அடர் வெங்காலன் உயிர் விண்டபினை நமன்தூதர்
ஆல மிடற்றான் அடியான் என்றடர அஞ்சுவரே 5

தண்மதியும் வெய்யரவும் தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதல் உமைஓர் கூறுகந்தான் உறை கோயில்
பண்மொழியால் அவன் நாமம் பல ஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில் சேர் கரும் பெணை மேல் வீற்றிருக்கும்
வெண்காடே 6

சக்கரம் மாற்கீந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும் அடைந்தயிராவதம் பணிய
மிக்கதனுக்கருள் சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்குடையானும் முக்கண் உடை இறையவனே 7

பண் மொய்த்த இன்மொழியாள் பயம் எய்த மலை எடுத்த
உண்மத்தன் உரம் நெரித்தன்றருள் செய்தான் உறை கோயில்
கண் மொய்த்த கரு மஞ்ஞை நடமாடக் கடல் முழங்க
விண்மொய்த்த பொழில்வரி வண்டிசை முரலும் வெண்காடே. 8

கள்ளார் செங்கமலத்தான் கடல் கிடந்தான் என இவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கு ஓடிஉயர்ந்தாழ்ந்தும் உணர்வறியான்
வெள்ளானை தவம் செய்யும் மேதகு வெண்காட்டான் என்றுள்ளாடி
உருகாதார் உணர்வுடைமை உணரோமே. 9

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டு மொழி பொருள் என்னும்
பேதையர்கள் அவர் பிறிமின் அறிவுடையீர் இது கேண்மின்
வேதியர்கள் விரும்பிய சீர்வியன் திரு வெண்காட்டான் என்
றோதியவர் யாதும் ஒரு தீதிலர் என்றுணருமினே. 10

தண்பொழில் சூழ் சண்பையர் கோன் தமிழ் ஞானசம்பந்தன்
விண்பொலி வெண்பிறைச்சென்னி விகிர்தன்உறை வெண்காட்டைப்
பண்பொலி செந்தமிழ் மாலை பாடிய பத்திவை வல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர் போய் வான் பொலியப் புகுவாரே. 11

## சுகப் பிரசவம் நடந்திடவும், வீடு, மனை அடைந்திடவும்

நன்றுடையானைத் தீயது இலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமை ஒரு பாகம் உடையானைச்
சென்றடையாத திரு உடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என் உள்ளம் குளிரும்மே. 1

கைம் மக ஏந்திக் கடுவனொடுஊடிக் கழைபாய் வான்
செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி
வெம்முக வேழத்து ஈருரி போர்த்த விகிர்தா நீ
பைம்முகநாகம் மதியுடன் வைத்தல் பழிஅன்றே 2

மந்தம் முழவம் மழலை ததும்ப வரைநீழல்
செந்தண் புனமும் சுனையும் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடைமேல் உடையார் விடை ஊரும்
எம்தம் அடிகள் அடியார்க்கல்லல் இல்லையே. 3

துறை மல்கு சாரல் சுனை மல்கு நீலத்திடை வைகிச்
சிறைமல்கு வண்டும் தும்பியும் பாடும் சிராப்பள்ளிக்
கறை மல்கு கண்டன் கனல் எரி ஆடும் கடவுள் எம்
பிறை மல்கு சென்னி உடையவன் எங்கள் பெருமானே. 4

கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில் மூன்றும்
சிலை வரையாகச் செற்றனரேனும் சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவர் அல்லாமை உரைப்பீர்காள்
நிலவரை நீலம் உண்டதும் வெள்ளை நிறமாமே. 5

வெய்ய தண் சாரல் விரிநிற வேங்கைத் தண்போது
செய்ய பொன் சேரும் சிராப்பள்ளி மேய செல்வனார்
தையல் ஓர் பாகம் மகிழ்வர் நஞ்சுண்பர் தலை ஓட்டில்
ஐயமும் கொள்வர் ஆர் இவர் செய்கை அறிவாரே. 6

வேய் உயர் சாரல் கரு விரல் ஊகம் விளையாடும்
சேய் உயர் கோயில் சிராப்பள்ளி மேய செல்வனார்
பேய் உயர் கொள்ளி கை விளக்காகப் பெருமானார்
தீ உகந்தாடல் திருக்குறிப்பாயிற்று ஆகாதே. 7

மலை மல்கு தோளன் வலிகெட ஊன்றி மலரோன்தன்
தலை கலனாகப் பலி திரிந்துண்பர் பழி ஓரார்
சொல வல வேதம் சொலவல கீதம் சொல்லுங்கால்
சிலவல போலும் சிராப்பள்ளிச் சேடர் செய்கையே. 8

அரப் பள்ளியானும் மலர் உறைவானும் அறியாமைக்
கரப்புள்ளி நாடிக் கண்டிலரேனும் கல் சூழ்ந்த
சிராப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனை தோறும்
இரப்புள்ளீர் உம்மை ஏதிலர் கண்டால் இகழாரே 9

நாணாது உடை நீத்தோர்களும் கஞ்சி நாட்காலை
ஊணாப் பகல் உண்டோதுவோர்கள் உரைக்கும் சொல்

பேணாதுறுசீர் பெறுதும் என்பீர் எம் பெருமானார்
சேண் ஆர் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே 10

தேன் நயம் பாடும் சிராப்பள்ளியானைத் திரை சூழ்ந்த
கானல் சங்கேறும் கழுமல ஊரில் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம் மிகு பாடல் இவை வல்லார்
வான சம்பந்தவரொடு மன்னி வாழ்வாரே. 11

---

## தம்பதிகள் ஒற்றுமையுடன் வாழவும் குடும்பத்தில் ஒற்றுமை நிலவிடவும்

அயில் ஆரும் அம்பதனால் புரம் மூன்றெய்து
குயில் ஆரும் மென்மொழியாள் ஒரு கூறாகி
மயில் ஆரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கில்லைபாவமே 1

விதியானை விண்ணவர்தாம் தொழுதேத்திய
நெதியானை நீள் சடைமேல் நிகழ்வித்த வான்
மதியானை வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாட வல்லார் வினைமாறுமே. 2

எய்ப்பானார்க்கு இன்புறுதேன் அளித்தூறிய
இப்பாலாய் எனையும் ஆள உரியானை
வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை மேவி நின்றார் வினை வீடுமே. 3

விடையானை மேல்உலகேழும் இப்பார்எல்லாம்
உடையானை ஊழிதோறூழி உளதாய
படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி
அடைவானை அடைய வல்லார்க்கில்லை அல்லலே. 4

எறியார் பூங்கொன்றையினோடும் இளமத்தம்
வெறிஆரும் செஞ்சடை ஆரம் மிலைத்தானை
மறிஆரும் கைஉடையானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்ப வல்லார்க்கிடர் சேராவே. 5

மொழியானை முன் ஒரு நான்மறை ஆறங்கம்
பழியாமைப் பண் இசையான பகர்வானை
வழியானை வானவர் ஏத்தும் மணஞ்சேரி
இழியாமை ஏத்த வல்லார்க்கெய்தும் இன்பமே. 6

எண்ணானை எண்ணமை சீர் இமையோர்கட்குக்
கண்ணானைக் கண் ஒரு மூன்றுடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேச நின்றார் பெரியோர்களே. 7

எடுத்தானை எழில் முடி எட்டும் இரண்டும் தோள்
கெடுத்தானைக் கேடிலாச் செம்மை உடையானை
மடுத்தார வண்டிசை பாடும் மணஞ்சேரி
பிடித்தாரப்பேண வல்லார் பெரியோர்களே. 8

சொல்லானைத் தோற்றம் கண்டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுதோங்க
வல்லார் நல் மாதவர் ஏத்தும் மணஞ்சேரி
எல்லாமாம் எம்பெருமான் கழல் ஏத்துமே 9

சற்றேயும் தாம் அறிவில் சமண் சாக்கியர்
சொல் தேயும் வண்ணம் ஓர் செம்மை உடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர் மேல் வினை பற்றாவே. 10

கண்ணாரும் காழியர்கோன் கருத்தார்வித்த
தண்ணார்சீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
மண்ணாரும் மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ணாரப் பாட வல்லார்க்கில்லை பாவமே. 11

## உணவும், உறக்கமும் சீராகப் பெற்றிடவும் மனக்கவலை நீங்கிடவும்

காதல் ஆகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நல் நெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நவச்சிவாயவே. 1

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாள்மலர் வார் மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே. 2

நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராய்த் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே. 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்தோத வல்லார்தமை நண்ணினால்
நியமம்தான் நினைவார்க்கினியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே. 4

கொல்வாரேனும் குணம் பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே. 5

மந்தரம் மன பாவங்கள் மேவிய
பந்தனையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே. 6

நரகம் ஏழ் புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயினர் ஆயின் உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல் மேல்
தலம்கொள் கால் விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலம்கொள்ள நாமம் நமச்சிவாயவே. 8

போதன் போது அன கண்ணனும் அண்ணல்தன்
பாதம்தான் முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே. 9

கஞ்சி மண்டையர் கையில் உண் கையர்கள்
வெம்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுது செய்
நஞ்சுள் கண்டன் நமச்சிவாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்தேத்த வல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே 11

## குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவிட

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. 1

போதையார் பொன் கிண்ணத்தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 2

தொண்டணை செய்தொழில் துயர் அறுத்துய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண் துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண் துணையாக ஓர் பெருந்தகை இருந்ததே. 3

அயர்வுளோம் என்று நீ அசைவொழி நெஞ்சமே
நியர் வளை முன் கையாள் நேரிழையவ ளொடும்
கயல் வயல் குதி கொளும் கழுமல வளநகர்ப்
பெயர் பல துதி செயப் பெருந்தகை இருந்ததே 4

அடைவிலோம் என்று நீ அயர்வொழி நெஞ்சமே
விடை அமர் கொடியினன் விண்ணவர் தொழுதெழும்
கடை உயர் மாடம் ஆர் கழுமல வளநகர்ப்
பெடை நடையளளொடும் பெருந்தகை இருந்ததே. 5

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபலக்
கற்ற நல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேர் அல்குல் திருந்திழை யவளொடும்
பெற்றெனை ஆளுடைப் பெருந்தகை இருந்ததே. 6

குறைவனை வது மொழி குறைவொழி நெஞ்சமே
நிறை வளை முன்கையாள் நேரிழையவளொடும்
கறை வளர் பொழில் அணி கழுமல வளநகர்ப்
பிறை வளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே. 7

அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடி யாழ்பாடவே
கருக்கு வாள் அருள் செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்கு நீரவளொடும் பெருந்தகை இருந்ததே. 8

நெடியவன் பிரமனும் நினைப்ப அரிதாயவர்
அடியொடு முடி அறியா அழல் உருவினன்
கடி கமழ் பொழில் அணி கழுமல வளநகர்ப்
பிடி நடையவளொடும் பெருந்தகை இருந்ததே. 9

தாருறு தட்டுடைச் சமணர் சாக்கியர்கள்தம்
ஆருறு சொல் களைந்து அடி இணை அடைந்துய்ம்மின்
கார் உறுபொழில் வளர் கழுமல வளநகர்ப்
பேரறத்தாளொடும் பெருந்தகை இருந்ததே. 10

கருந்தடந் தேன் மல்கு கழுமல வளநகர்ப்
பெரும் தடம் கொங்கையோடிருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்உலகாள்வரே. 11

## கொடிய விஷங்கள் நீங்கிடவும்,
## அகால மரணம் ஏற்படாதிருக்கவும்

ஒன்று கொலாம் அவர் சிந்தை உயர் வரை
ஒன்று கொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொலாம் இடு வெண்தலை கையது
ஒன்று கொலாம் அவர் ஊர்வது தானே. 1

இரண்டு கொலாம் இமையோர் தொழு பாதம்
இரண்டு கொலாம் இலங்கும் குழை பெண் ஆண்
இரண்டு கொலாம் உருவம் சிறு மான் மழு
இரண்டு கொலாம் அவர் எய்தின தாமே. 2

மூன்று கொலாம் அவர் கண்ணுதல் ஆவன
மூன்று கொலாம் அவர் சூலத்தின் மொய்யிலை
மூன்று கொலாம் கணை கையது வில் நாண்
மூன்று கொலாம் புரம் எய்தன தாமே 3

நாலு கொலாம் அவர் தம் முகம் ஆவன
நாலு கொலாம் சனனம் முதல் தோற்றமும்
நாலு கொலாம் அவர் ஊர்தியின் பாதங்கள்
நாலு கொலாம் மறை பாடினதாமே. 4

அஞ்சு கொலாம் அவர் ஆடரவின் படம்
அஞ்சு கொலாம் அவர் வெல் புலன் ஆவன
அஞ்சு கொலாம் அவர் காயப்பட்டான் கணை
அஞ்சு கொலாம் அவர் ஆடின தாமே 5

ஆறு கொலாம் அவர் அங்கம் படைத்தன
ஆறு கொலாம் அவர்தம் மகனார் முகம்
ஆறு கொலாம் அவர் தார்மிசை வண்டின் கால்
ஆறு கொலாம் சுவை ஆக்கின தாமே. 6

ஏழு கொலாம் அவர் ஊழி படைத்தன
ஏழு கொலாம் அவர் கண்ட இருங்கடல்
ஏழு கொலாம் அவர் ஆளும் உலகங்கள்
ஏழு கொலாம் இசை ஆக்கின தாமே. 7

எட்டுக் கொலாம் அவர் ஈறில் பெரும்குணம்
எட்டுக் கொலாம் அவர் சூடும் இன மலர்
எட்டுக் கொலாம் அவர் தோள் இணை ஆவன
எட்டுக் கொலாம் திசை ஆக்கினதாமே. 8

ஒன்பது போல் அவர் வாசல் வகுத்தன
ஒன்பது போல் அவர் மார்பினில் நூல் இழை
ஒன்பது போல் அவர் கோலக் குழல்சடை
ஒன்பது போல் அவர் பாரிடம் தானே. 9

பத்துக் கொலாம் அவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக் கொலாம் எயிறு நெரிந்து உக்கன
பத்துக் கொலாம் அவர் காயப்பட்டான் தலை
பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே. 10

--

## உடல் உறுப்புகள் யாவும் நலம் பெற!

தலையே நீ வணங்காய் தலை மாலை
தலைக்கு அணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ – கடல்,
நஞ்சு உண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசி நின்றாடும் பிரான் தன்னை
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ – சிவன்,
எம் இறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ 3

மூக்கே நீ முரலாய் – முது, காடுறை
முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய் 4

வாயே வாழ்த்து கண்டாய் – மத, யானை
உரி போர்த்துப்
பேய் வாழ் காட்டகத்தாடும் பிரான் தன்னை
வாயே வாழ்த்து கண்டாய். 5

நெஞ்சே நீ நினையாய் – நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சு ஆடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய். 6

கைகாள் கூப்பித் தொழீர் – கடி, மாமலர்
    தூவி நின்று
பைவாய்ப் பாம்பு அரை ஆர்த்த பரமனைக்
    கைகாள் கூப்பித் தொழீர் 7

ஆக்கையால் பயன் என் – அரன், கோயில்
    வலம் வந்து
பூக் கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்
    ஆக்கையால் பயன் என். 8

கால்களால் பயன் என் – கறைக், கண்டன்
    உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
    கால்களால் பயன் என். 9

உற்றார் ஆர் உளரோ – உயிர், கொண்டு
    போம் பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு
    உற்றார் ஆர் உளரோ. 10

இறுமாந்து இருப்பன் கொலோ – ஈசன்
    பல் கணத்தெண்ணப் பட்டுச்
சிறுமான் ஏந்தி தன் சேவடிக் கீழ்ச் சென்றங்கு
    இறுமாந்திருப்பன் கொலோ. 11

தேடிக் கண்டு கொண்டேன் – திருமாலொடு
    நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என் உள்ளே
    தேடிக் கண்டு கொண்டேன் 12

---

## சகல நோய்களும் நீங்க

ஆட்டுவிக்கும் ஆண்டவனே
ஆதிபர மேஸ்வரனே
பாட்டுவழி வேண்டுகின்றேன்
பண்தமிழில் பாடுகின்றேன்
காட்டுவழி நான் நடந்து
காதவழி சென்றாலும்
மூட்டுவலி வந்திடாமல்
முக்கண்ணனே முன்னருள்வாய்!

தலைபாரம் தந்தெனக்கு
தலைசுற்றல் பண்ணிடாதே
தலைநோவும் வந்தெனக்கு
தவிதவிக்கச் செய்திடாதே
தலைமீது கங்கைநதி
தண்மதியும் பூண்டவனே
தலைதாழ்த்தி வேண்டுகின்றேன்
தயவுடனே காத்திடய்யா!

பன்னிரண்டு விழி படைத்த
பார்வதியாள் புத்திரனே
கண்ணிருண்டு போகாமல்
கந்தவேளே காத்திடய்யா!
அன்னைபர மேஸ்வரியின்
அருமைந்தா முருகவேளே
என்னைக் கண் பார்த்திடய்யா
என்கண்ணைக் காத்திடய்யா!

தஞ்சைப் பெரிய கோயில்
தன்னில் கொலுவிருக்கும்
நஞ்சை விரும்பியுண்ட
நாதா பிரகதீசா – உன்
அஞ்சை தினமெழுதி
நெஞ்சை உனக்களித்து
நித்தம் பணிகின்றேனே!

புஞ்சை நிலம்விளைய
பூமி மனம்குளிர
மஞ்சைப் பொழியவைக்கும்
மகா மகேஸ்வரனே
நெஞ்சுவலி வந்தலறும்
நிலையெனக்கு வந்திடாமல்
கெஞ்சியுன்னை வேண்டுகிறேன்
காசிநாதா காத்திடுவாய்!

நாமத்தைப் போற்றுகின்றேன்
நானிலத்தில் நான்வாழ
சேமத்தைத் தந்திடுவாய்
செல்வ கணபதியே!
ஊமத்தை வாழ்வகற்றி
ஊழ்வினை தானகற்றி
பூமெத்தை போல் வாழ்வு
பூரிக்கச் செய்திடுவாய்!

ஒன்றுக்குள் இரண்டான முக்கண்ணனே!
நான்முகனே! ஐங்கரனே! ஆறுமுகனே!
ஏழுமலை மாலவனே! எட்டுக்குடி வேலவனே!
ஒன்பதுகோள் நாயகரே! ஓம்சக்தி நாயகியே!

பத்துத் தலையறுத்த பரந்தாமா, ஸ்ரீராமா!
முத்துத் தமிழெடுத்து முப்போதும் வணங்குகின்றேன்
சத்துக் குறையாமல் சறுக்கியே வீழாமல்
பித்துக் குளியாகிப் பிதற்றியே திரியாமல்...

சுருதி மாறாமல் பேச்சு பிறக்கும்படி
மறதி நேராமல் மூச்சு சிறக்கும்படி
குருதி குறையாமல் உறுதி இருக்கும்படி
இறுதி வரைக்கும்என் இளமை நிலைக்கும்படி...

அருள வேண்டும் இறைவா – எந்த
அகிலத் துக்கும் தலைவா
அணைத்துக் காக்க வருவாய் நல்
அன்பு கொண்டு விரைவாய்!

இந்தத் துதியைப் பாடுகின்ற
என்னைப் போன்ற எவரும்
வந்த துன்பம் நீங்கி நல்ல
வளமை இன்பம் பெறுவர்!
தந்தவேழ முகத்தோனின்
தண்ணருளைப் பெறுவர்!
சொந்தபந்தம் சூழவாழும்
சுகவாழ்வைப் பெறுவர்!

———

## பாவங்கள் போக்கிடும் ராதா தேவியின் அருள் கிடைக்க

ஏற்றமார் தலைவி போற்றி
ராச மண்டலத்தாய் போற்றி
போற்றி எம் கண்ணன் அன்பு
பொருந்தியோய் உலகம் மூன்றும்
தோற்றுவித்து அருளும் அன்னாய்
துன்னருள் கடலே போற்றி
சாற்றயன் விண்டு வாதி
பணிந்திடு தாயே போற்றி
புகழ் சர சுவதி போற்றி
பொலி சாவித் திரியே போற்றி
திகழும் சங் கரியா நின்ற
தேவியே போற்றி கங்கை
மகிழ் பத்மா வதியே போற்றி
மங்கள சண்டி யோடு
புகல் சட்டி தேவியாகி
பொருந்தினோய் போற்றி போற்றி
துளசி பொன்மகளாய் நின்றாய்
துர்க்கையாம் வடிவே போற்றி
வளர்பக வதியே எல்லா
வடிவமும் ஆனாய் போற்றி
தளர் விலாது ஓங்கும் மூலப்
பகுதி யாம் தாயே போற்றி
அளவிலா அருளாய் சன்ம
ஆழிநின்று எடுப்பாய் போற்றி.

———

## காலையில் எழுந்திடுவோம்;
## கடவுளை நினைத்திடுவோம்!

எல்லா வயதினரும், எல்லா நிலையினரும் அதிகாலையில் துயில் எழ வேண்டும். பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லப்படும் அதிகாலைப் பொழுதில் துயில் எழுந்தால் உடலும், உள்ளமும் உற்சாகம் பெறும். படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது பூமி தேவியை வணங்கி, ‘தாயே! உலகிற்கே தாயாகும் உன்னை மிதிப்பதைப் பொருத்தருள வேண்டும்’ எனப் பிரார்த்தித்து இடது காலை முதலில் பூமியில் வைக்க வேண்டும். இன்று நாம் செய்யப்போகும் காரியங்களில் எல்லாம் வெற்றி உண்டாவதற்காக இடது காலைத்தான் முதலில் வைத்து எழுந்திருக்க வேண்டும்.

அதிகாலையில் துயில் எழுந்தவுடன் தெய்வத்தை நினைக்க வேண்டும். இரண்டு கைகளையும் ஒன்றுடன் ஒன்று தேய்த்து அகல விரிக்க வேண்டும். இரண்டு உள்ளங்கைகளையும் பார்க்க வேண்டும். அவரவர் கைகளில் அன்னையர் மூவரும் எழுந்தருளியிருக்கிறார்கள். துர்கா, லட்சுமி, சரஸ்வதி எனப்படும் முப்பெரும் தேவியரும் கரங்களில் இருக்கிறார்கள்.

கரத்தில் உள்ள விரல் நுனியில் வசிக்கும் மகாலட்சுமியே உன்னை தரிசிக்கிறேன்!

உள்ளங்கையின் மத்தியில் உள்ள சரஸ்வதிதேவியே உன்னை தரிசிக்கிறேன்!

உள்ளங்கையின் அடிப்பகுதியில் உள்ள பார்வதி தேவியே உன்னை தரிசிக்கிறேன்!

என்ற பொருள்படும் வடமொழி சுலோகத்தைச் சொல்லி முப்பெரும் தேவியரை வணங்கி அன்றைய பொழுதைத் தொடங்க வேண்டும்.

காலை எழுந்தவுடன் உள்ளங்கைகளைத் தேய்த்து அகல விரித்து சொல்ல வேண்டிய வடமொழி சுலோகம் பின்வருமாறு.

‘கராக்ரே வஸதே லக்ஷ்மி கரமத்யே சரஸ்வதி
கரமூலேது கௌரீஸ்யாத் பிரபாதே கர தர்சனம்’.

உயர்ந்த பெருநோக்குடன் எழுவாய் முழு விழிப்புடன் செயல்படுவாய். மங்களகரமான நன்மை பயக்கும் செயல்களில் முழு மூச்சுடன் ஈடுபடுவாய். வெற்றி நிச்சயம் என்ற உறுதி கொள்வாய். இடையறாது பணிபுரியும் போது நேரிடும் இன்னல்களை பொருட்படுத்தாதிருப்பாய்.

---

## எப்படியும் பிரார்த்தனை செய்யலாம்!

காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருப்பதற்கு முன் சிறிது நேரம் பகவானை தியானம் செய்துவிட்டு எழுந்தால் நல்லது. பகவானை தியானிப்பதற்கு நிற்க வேண்டும்; உட்கார வேண்டும் என்பதெல்லாம் இல்லை. எந்த நிலையிலும் தியானிக்கலாம். படுத்துக் கொண்டே தியானிக்கலாம். “என் உள்ளத்தைக் காத்தருள்வாய். நீ கோயிலில் இருக்க தகுந்த இடமாக என்னுடைய உள்ளத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள உதவுவாய்”! என்று மனதுக்குள் பிரார்த்தனை செய்துகொண்டு எழுந்திருக்கவும்.

இரவில் படுத்துத் தூங்கும்போது ஆண்டவனைத் தியானித்துவிட்டு தூங்க வேண்டும். இதற்கு ஒரு நிமிஷமே போதும். “இன்று நான் செய்த குற்றங்கள் இன்றோடு தீர்ந்து போகட்டும். இனி இவ்வாறு செய்ய மாட்டேன். அவை மறுபடியும் என்னை சேராது இருக்க அருள்புரிவாய்!” என்று ஆண்டவனிடம் சொல்லிவிட்டு தூங்க வேண்டும். பகவான் நமது பக்கத்திலேயே இருக்கிறார்: எங்கேயோ தூரத்தில் அல்ல.

பகவானை தகப்பன் சொரூபமாகவம், குழந்தை சொரூபமாகவும் தியானிக்கலாம். இருப்பினும் தாயின் வடிவமாக நினைத்துப் பார்ப்பதே பெரிதாக இருக்கும் என்று நினைக்கத் தோன்றுகிறது. அந்தந்த சமயத்தில் தோன்றியபடி செய்யலாம். இப்படி இயல்பாக வழிபடுவதில் சிரமம் ஒன்றும் இல்லை. இதை எளிதாக எல்லோரும் எப்போதும் எந்த நிலையிலும் செய்யலாம். உள்ளம் கசிந்து உருகினால் ஆண்டவனின் அருள் நிச்சயமாக கிடைக்கும்.

## வணங்கித் தொழுதிடுவோம்

### காலையில் படுக்கையிலிருந்து எழும்போது

“அண்ணாமலையார் எம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி”

### குளிக்கும்போது

“சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி”

### உண்ணும் போது

“தென்தில்லை மன்றினுள் ஆடிபோற்றி
இன்றெனக்கு ஆரமுதம் ஆனாய்போற்றி”

### நீர் அருந்தும் போது

“நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி”

### காலையில் தொழில் தொடங்கும்போது

“வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி”

### வெளியில் செல்லும்போது

"காவாய் கனகக் குன்றே போற்றி
ஆளந்தனுக்கு அருளாய் போற்றி"

### ஆலயக் கோபுரத்தைக் காணும்போது

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

### உறங்கும் முன்

ஓம் உண்ணலும் உனதே உயர்த்தலும் உனதே
உடல் உயர் மனமெல்லாம் உனதே
எண்ணலும் உனதே இச்சையும் உனதே
என் செயல் பயன் எல்லாம் உனதே.

---

## உலகை வசமாக்கலாம்

உலகை வசப்படுத்த வேண்டுமா? இந்த உலகத்தையே வசப்படுத்த வேண்டும் என்ற உணர்வு வருவதில் தவறில்லை. நினைப்பதை உயர்வாகத்தான் நினைக்க வேண்டும். நினைப்பதை உறுதியாக நினைத்தால் நிச்சயம் ஜெயிக்கலாம்.

'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்' என்பார் வள்ளுவர்.

நினைத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்றால் உரிய தலத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். சரியான நேரத்தில் பரிகாரத்தைச் செய்ய வேண்டும். அதையும் முறைப்படி செய்ய வேண்டும். இறைவன் ஏழை பங்காளன். அவனை நோக்கி பக்தி சிரத்தையுடன் பக்தர்கள் ஒரு அடி எடுத்து வைத்தால் அவர்களை நோக்கி ஆண்டவன் நூறு அடிகளை எடுத்து வைத்து

வருகிறான். ஓடோடி வருகிறான். இறைவன் அருமையானவன் – ஆனால் அதே நேரத்தில் எளிமையானவனும் கூட. முப்பத்து முக்கோடி தேவர்களாலும் அறியப்படாத இறைவன் தன் பக்தர்களுக்காக இறங்கி வருகிறான். அடி முடி அறிய முடியாத அந்த தெய்வம் பக்தர்களைத் தேடி வருகிறது.

பக்தர்கள் தம் துன்பத்தைத் துடைக்கிறான். எண்ணங்களை ஈடேற்றுகிறான் என்பதை பல்வேறு நிகழ்வுகள் நமக்கு காட்டுகின்றன. இறைவன் பக்தர்களுக்காக – அவர் தம் மன வருத்தம் தீர்ப்பதற்காக எதையும் செய்வான்; வளைந்தும் கொடுப்பான் – நிமிர்ந்தும் நிற்பான் என்பதை உணர்த்தக் கூடியவை.

---

## தெய்வமும், பலன்களும்...

எந்த தெய்வத்தை வணங்கினால், என்ன பலன் கிடைக்கும்?

**விநாயகர்** – இடையூறு நீங்கும்
**மகாலட்சுமி, லட்சுமி நாராயணர்** – செல்வம் பெருகும்
**தன்வந்திரி, தட்சிணாமூர்த்தி** – நோய் தீரும்
**செவ்வாய், சுப்பிரமணியர்** – வீடு, நிலம் வந்து சேரும்
**ருத்திரன்** – நீண்ட ஆயுள், ஆரோக்கியம் பெறலாம்
**காமாட்சி அம்மன், துர்க்கை** – திருமணம் விரைவில் நடைபெறும்
**மங்கள கவுரி** – மாங்கல்யம் நிலைக்கும்
**திருப்பதி வெங்கடாஜலபதி** – தொழில் சிறக்கும்
**தான்யலட்சுமி** – விவசாயம் செழிக்கும்
**அய்யப்பன், ஆஞ்சநேயர்** – சனி தோஷம் நீங்கும்
**சந்தானலட்சுமி, சந்தான கிருஷ்ணன்** – புத்திர பாக்கியம் கிட்டும்
**அன்னபூரணி** – உணவு கஷ்டம் தீரும்
**திருச்செந்தூர் முருகன்** – பகைவர் தொல்லை அகலும்

---

## பேரைச் சொல்லுங்கள் பேறெல்லாம் பெறுங்கள்

விநாயகப் பெருமானுடைய 16 பெயர்களைக் குறிக்கின்ற தோத்திரத்தை காலை – நண்பகல் – மாலை என்ற மூன்று வேளைகளில் பக்தியுடன் ஒரே ஒருமுறை சொன்னால் போதும். சுகமும், வெற்றியும் கிடைக்கும்; கருடனைக் கண்டு பாம்பு விலகி ஓடுவது போல தடைகள் எல்லாம் விலகி ஓடும். அந்தப் பெயர்கள் விநாயகருடைய 16 வகையான வடிவங்களைக் குறிப்பிடுபவையே ஆகும்.

காலையும், மதியமும், மாலையும் பாராயணம் செய்ய வேண்டிய தோத்திரம் இதுதான்.

'பாலகணபதி'யின் அருட்பதமலர்கள் போற்றி!
பகர் 'தருண கணபதி' யின் பாதங்கள் போற்றி!
சீல 'பக்த கணபதி' தம் சீரடிகள் போற்றி!
சீர் 'வீர கணபதி' யின் சேவடிகள் போற்றி!
மேல் 'சக்தி கணபதி' யின் மெல்லடிகள் போற்றி!
மிளிர் 'துவிஜ கணபதி' யின் மென்கழல்கள் போற்றி!
பால் 'சித்தி கணபதி' யின் பதமலர்கள் போற்றி!
'உச்சிஷ்ட கணபதி' யின் உயர்தாள்கள் போற்றி!
இன்புதரும் 'விக்னராஜர்' இணையடிகள் போற்றி!
எழில் 'க்ஷிப்ர கணபதி' யின் ஈரடிகள் போற்றி!
கன்னடத்து 'ஹேரம்பர்' கழலிணைகள் போற்றி!
கவின் 'லக்ஷ்மி கணபதி' யின் கழல் மலர்கள் போற்றி!
நன் 'மஹா கணபதி' யின் இணையடிகள் போற்றி!
நல் 'விஜய கணபதி' யின் சேவடிகள் போற்றி!
இன்ப 'நிருத்த கணபதி' யின் இருதாள்கள் போற்றி!
'ஊர்த்துவ கணபதி' தாள் போற்றி! போற்றி!

———

## பெயரைச் சொன்னால் போதும் பேறெல்லாம் தேடிவரும்!

எல்லா தெய்வத்திருநாமங்களும் மகிமை படைத்தவைகளே. இதை சான்றோர் பலரின் வாக்குகள் சந்தேகத்திற்கு இடமின்றி புலப்படுத்துகின்றன. வந்த வினையும், வருகின்ற வல்வினையும் கந்தன் எனச்சொல்ல கலங்கும் என்பது தமிழ்ப்பாடல்.

அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்

என்ற பாடல் தெய்வத் திருநாமத்தை ஒரே ஒருதரம் உள்ளன்போடு சொன்னால்கூட இறையருள் கிட்டும் என்பதை காட்டக்கூடியதாகும்.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிட தீவினை மாளும்
சிவ சிவ என்றிட தேவரும் ஆவர்
சிவ சிவ என்பது சிவகதி தானே

–––

## கந்தன் அருள் கிட்டிட

முருகன் அருள் பெற்ற அருளாளர்களில் ஒருவர் ஸ்ரீ குமரகுருபரர். பிள்ளைப் பருவத்தில் ஊமையாக இருந்த இவர் செந்தில் கந்தன் திருவருளால் பேசத் தொடங்கினார். எடுத்த எடுப்பிலேயே அவர் பாடிய நூல் கந்தர்கலி வெண்பா. இதை 'குட்டி கந்தபுராணம்' என்பார்கள். சைவ சித்தாந்த தத்துவங்கள் கொட்டிக் கிடக்கும் நூல் இது. இதை தினந்தோறும் பாராயணம் செய்தால் கந்தன் அருள் கிடைப்பது உறுதி. நூற்றுக்கணக்கானஅடிகளாலான இந்த நூலை பாராயணம் செய்ய இயலாதவர்கள் நூலின்

இறுதியிலுள்ள இந்தப் பகுதியை மட்டுமாவது தினந்தோறும் பாராயணம் செய்ய முருகன் அருள் கிடைப்பது உறுதி.

‘சந்ததமும் பல்கோடி சன்மப் பகையும் அவமிருந்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் – பல்கோடி
பாதகமும் செய்வினையும் பாம்பும் பிசாசும் அடல்
பூதமும தீ நீரும் பொரு படையும் – தீது அகலா
வெவ்விடமும் துட்ட மிருகம் முதலாம் எவையும்
எவ்விடம் வந்து எம்மை எதிர்த்தாலும் – அவ்விடத்தில்
பச்சை மயில்வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் – கச்சைத்
திருவரையும் சீரடியும் செங்கையும் ஈராறு
அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் – விரிகிரணம்
சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற – வந்து இடுக்கண்
எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்து புகுந்து
உல்லாசமாக உளத்திருந்து – பல்விதமாம்
ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவதானமும் சீர்ப்
பேசும் இயல் பல் காப்பிய தொகையும் – ஓசை
எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து – ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் – தம்மை விடுத்து
ஆயும் பழைய அடியாருடன் கூடித்
தோயும் பரபோகம் துய்ப்பித்து – சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கும் முன்னின்று அருள்!

———

## ஒரு நாளும் தாழ்வு இல்லை!

வாழ்க்கையில் குறைகள் இல்லாமல் இருக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்கிறோம். இந்த ஜென்மத்திலும், அடுத்த ஜென்மத்திலும் ஒரு குறையும் இல்லாமல் இருக்க வேண்டுமா? அதற்கு ஒரு சுலபமான வழியை கந்தர் அலங்காரம் கூறுகிறது.

எல்லா நேரத்திலும் முருகப் பெருமானுடைய திருநாமத்தை உள்ளன்புடன் ஜெபித்துக் கொண்டிருக்க வேண்டும். இளமையிலிருந்து ரத்தத்தில் ஊறிப் போன முருக ஜெபம் இறக்கும் தருவாயில் நிச்சயம் கைகொடுக்கும். இளமை தொடங்கி இறக்கும் தருவாய் வரை மறக்காமல் முருகனை தியானிப்பவருக்கு குறைகள் ஒன்றுமில்லை என்கிறது கந்தர் அலங்காரம்.

‘சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கு ஒரு தாழ்வில்லையே’.

---

## மாதவனை தியானிப்போம்

தண்ணீருக்கு நிறம் கிடையாது. காற்றுக்கும் நிறம் கிடையாது. ஆனால் நீர் கடலாகவும், காற்று வானமாகவும் பரந்து விரிந்து கிடக்கும்போது பார்ப்பவர் கண்களுக்கு நீல நிறமாகத் தெரிகிறது. எல்லா இடத்திலும் பரந்து அகன்று நிற்கும் இந்த பொருள்கள் நீல நிறமாக இருப்பதைப் போலவே எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளான மகாவிஷ்ணுவும் நீல நிறமாகக் காட்சி தருகிறார். அதனால் அவரை நீலமேகச் சியாமளன் என்று அழைக்கிறார்கள்.

மகாவிஷ்ணுவின் இதயத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள். அதனால் அவரை ஸ்ரீநிவாசன்என்கிறார்கள். திருமருமார்பன், ஸ்ரீவத்ஸன் என்று சொல்வதும் இதைத்தான்.

தூங்கி எழுந்தவுடன் ஹரியை துதிக்க வேண்டும். வெளியில் புறப்பட்டுச்செல்லும் முன் கேசவனை தியானிக்க வேண்டும். சாப்பிடத் துவங்கும்போது கோவிந்தனை நினைக்கவேண்டும். தூங்கும் முன் மாதவனை தியானம் செய்ய வேண்டும்.

'ஓம் நமோ நாராயணாய' என்பது அஷ்டாச்சரம். இது எல்லா துன்பங்களையும் நீக்கக் கூடியது. 'ஓம்' என்பதை முதலாவதாகவும் 'நமோ' என்பதை இரண்டாவதாகவும், 'நாராயணாய' என்பதை மூன்றாவதாகவும் உச்சரிக்க வேண்டும்.

'ஓம் நமோ வெங்கடேசாய நம' என்னும் திருநாமத்தை தினமும் காலையும், மாலையும் 108 முறை ஜெபித்தால் கடும் துயரங்கள் நீங்கும்.

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்பரன்
சென்று சேர் திருவேங்கட மாமலை
ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே.

---

## நலம் தருவார் நாராயணன்!

ஒவ்வொரு மாதத்துக்கும் மகாவிஷ்ணுவின் வடிவங்களில் ஒவ்வொன்றை வழிபட வேண்டும் என்று குறிப்பிடும் வைணவ சம்பிரதாயம் உண்டு. இதன்படி பன்னிரெண்டு மாதங்களுக்கு பனிரெண்டு திருக்கோலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த பனிரெண்டு கோலங்கள் நான்கு வியூகங்களிலிருந்து தோன்றியவை. ஒரு வியூகத்துக்கு மூன்று வடிவங்கள்.

மகாவிஷ்ணுவின் வியூகங்களில் முதலாவது வியூகம் வாசுதேவர் என்பதாகும். இதிலிருந்து கேசவன், நாராயணன், மாதவன் என்ற மூன்று வியூகாந்தரங்கள் தோன்றின. கேசவன் மார்கழி மாதத்தில் வழிபட வேண்டிய தெய்வம். நாராயணன் தை மாதத்துக்குரிய தெய்வம்.

பாற்கடலில் பையத் துயிலும் பரமன் நாராயணன். 'நாராயணா' என்ற நாமத்தை சொன்னால் போதும் எல்லா நலன்களும் கிடைக்கும்.

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும் நீள் விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

---

## பலன் தரும் ஸ்லோகம்

மனக்கவலை கொண்டவர்கள், துக்கத்தால் வருந்துபவர்கள், சொத்துகளை இழந்தவர்கள், பயம் கொண்டவர்கள், தீராத நோயினால் வேதனையுறுபவர்கள் என அனைவரும் 'நாராயணா' எனும் திருநாமத்தை உச்சரித்தபோதே அந்த துன்பங்களிலிருந்து விடுபட்டு சுகமடைவார்கள். அப்படியொரு அமைதியை எங்களுக்கு அளிப்பாய் நாராயணா!

ஆர்த்தா விஹண்ணா சிதிலாச்ச பீதா
கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமானா :
ஸங்கீர்த்ய நாராயண சப்தமாத்ரம்
விமுக்தது கா ஸுகினோ பவந்து.

---

## வரமளிக்கும் எட்டு இலக்குமிகள்

உலகில் பெண் தெய்வத்துள் லக்ஷ்மி மிக முக்கியமானவள். அவள் தான்யம், தைரியம், சந்தானம், கல்வி இவைகளையும் அருள்கின்றாள்.

ஸ்ரீலட்சுமி – ஸ்ரீ ஆதிலட்சுமி, ஸ்ரீ தான்யலட்சுமி, ஸ்ரீ வீரலட்சுமி, ஸ்ரீ கெஜலட்சுமி, ஸ்ரீ சந்தான லட்சுமி, ஸ்ரீ விஜயலட்சுமி, ஸ்ரீ வித்யாலட்சுமி, ஸ்ரீ தன லட்சுமி என அஷ்ட லட்சுமிகளாக அருள் பாலிக்கின்றாள். சொர்க்கத்தில் – சொர்க்கலட்சுமியாகவும், பூவுலகில் ராஜ்யலட்சுமியாகவும், இல்லங்களில் கிருகலட்சுமி யாகவும், ஞானிகளுக்கு மோட்ச லட்சுமியாகவும் திகழ்கின்றாள். இத்திருவரமளிக்கும் எட்டு இலக்குமிகளையும் வணங்கித் துதித்திடுவோம்.

### ஸ்ரீ ஆதிலட்சுமி

“நின்மேலு மானை, நின் மகன் மேலு மானை, நின் மா கொழுநன்
தன் மேலு மானை, தமிழ் மேலு மானை, தவவாணிகச்
சின்னஞ்சிறுவர் தெரியாத காளையர் என் செயினும்
பின்னும் பொறுத்திருப்பாயே பெரிய இலக்குமியே!”

### ஸ்ரீ தான்யலட்சுமி

இருக்கும் இடமெங்கும் இன்கனியும் பூவும்
பெருக்கி மகிழ்வுதவும் பெண்ணே! பருக்கரும்பை
ஏந்தும் திருமகளே! எங்கள் கழனி யெல்லாம்
சேர்ந்து வளங்கொழிக்கச் செய்.

### ஸ்ரீ வீரலட்சுமி

“தரமுயர்ந்த வீரம் தருக்கர்களை வாட்டக்
கரமருவும் போர்க்கருவி காட்டி வரமளிக்கும்
வாகை புனைந்திலங்கும் வஞ்சிநீ எம்மனையிற்
சேர்க என பணிந்தோம் சேர்ந்து”

## ஸ்ரீ விஜயலட்சுமி - ஐஸ்வர்ய லட்சுமி

"வெற்றித் திருவே! விளக்கேற்றிக் கும்பிடுவார்
கற்றுச் சிறந்திடவும் கல்வியுடன் மற்றவையும்
உற்றுச் சிறந்திடவும் உண்மை நிமிர்ந்திடவும்
எற்றிடுக எங்கள் இடர்."

## ஸ்ரீ தனலட்சுமி

"காடுவெட்டிப் போட்டு கடிய நிலந்திருத்தி
வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேள் வணிகர் வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு."

## ஸ்ரீ வித்யாலட்சுமி

"நினைத்துத் தொழுதெழுந்தோம் நேயத் திருமால்
மனைக்கு விளக்கே! மலரால் உனக்கடிமை
செய் ஆனை போலுயர்ந்து சீர்கொண்டு இலங்கவே
தையால் நீ ஈவாய் தரம்."

## ஸ்ரீ கெஜலட்சுமி

"துலங்கு பொற் கும்பத் துதிக்கையால் ஆனை
நலங்கெழுநீர் ஆட்ட நயந்த இலங்கிழையே!
கையேந்தி உன் பாற் கசிந்து தொழுகின்றோம்
செய்யவளே சீரெமக்குச் செய்."

## ஸ்ரீ சந்தான லட்சுமி

"கள்ளூறும் வாயால் கனிமழலை பேசுகிற
பிள்ளை வரமருளும் பேரன்பே! எல்லோரும்
நல்லவரைப் பெற்றிடவும் நாடு சிறந்திடவும்
வல்லவளே! ஈவாய் வரம்."

---

## வெற்றி மீது வெற்றி வர...

எடுத்த காரியம் எல்லாவற்றிலும் வெற்றியைத் தருபவள் மகாலட்சுமி. இவளை விஜயலட்சுமி என்றும் சொல்வார்கள். எட்டு கைகளுடன் இருக்கும் இத்தாய் வெற்றி மீது வெற்றிகளைத் தரக்கூடியவள். இவளை

'சர்வமங்கள மாங்கல்யே
சிவேசர்வார்த்த சாதகே
சரண்யே த்ரியம்பகே தேவி
நாராயணீ நமோஸ்துதே'

என்று போற்றி வணங்க வேண்டும். தினமும் ஏழு முறையாவது இந்த சுலோகத்தைச் சொல்லி விஜயலட்சுமியை வணங்க வேண்டும். இடைவிடாமல் வணங்க எல்லா நன்மைகளையும் அடையலாம்.

---

## செல்வம் செழிக்க...

ஆயிரம் இதழ் ஆர் கஞ்சத்து
அமர்ந்தவள்; கருஞ்சி வப்பு
மேய வண் ணத்தின் ஆடை
விரும்பியே உடுத்தாள்; கூதிர்
பாய தண் திங்க ளேபோல்
பைங்கதிர் வீசும் மேனித்
தாய் எழில் திருமா மங்கை
தளிர் அடி போற்றி! போற்றி!

ஒப்பிலா மேனித் தேசால்
ஒளிர்பவள்; திருக்கண் நோக்காள்
தப்பிலா இன்பம் ஈயும்
தன்மையள்; தழலில் காய்ந்து

கப்பிய மாசு நீக்கி
    உருகிய கனகச் சோதி
திப்பிய உருவாள்; கற்பில்
    சிறந்தவள்; அடிகள் போற்றி!

மணி அணி புனைந்து கோல
    மஞ்சள் பட்டு உடுத்தும் தேவி;
பணிவினில் சிறிது ஈந்தாலும்
    பன்மடங்கு ஆக ஈவாள்
அணிபெறும் இளமை என்றும்
    அகன்றிடாது ஒளிரும் அன்னை
திணி பொருள் யாவும் ஈயும்
    செல்வி; சே வடிகள் போற்றி!

---

## நிறைந்த செல்வம் கிடைக்க வேண்டுமா?

நிறைந்த செல்வம் கிடைக்க வேண்டுமா? நீங்களே மலர் மாலை கட்டி இறைவனுக்கு அடிக்கடி சாத்துங்கள். நிச்சயம் பேரருள் கிடைக்கும். செல்வம் மல்கும். எல்லாரும் தினமும் ஒரு மலராவது தெய்வங்களுக்கு சார்த்தி மனதார தியானித்திட வேண்டும்.

துளக்கின் நன்மலர் தொடுத்தால் தூயவிண் ஏறலாகும் என்பார் அப்பர்.

'யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை' என்பது திருமந்திரம்.

---

## சுபிட்சம் வேண்டுமா?

சனிக்கிழமை மாலையில் அரச மரத்தை 7 முறை வலம் வந்து வணங்கினால் சகல செல்வங்களும் கிடைக்கும். மேலும், சனிக்கிழமை தவிர மற்ற நாட்களில் அரசமரத்தை தொட்டு வணங்கக்கூடாது.

துளசி மற்றும் தொட்டாசிணுங்கி செடியை ஒரே தொட்டியில் திங்கட்கிழமை காலை 6 முதல் 7 மணிக்குள் வைத்து, திங்கள்தோறும் பூஜித்து வந்தால் கடன் தொல்லைகள் நீங்கி சுபிட்சம் உண்டாகும்.

---

## லட்சுமி கடாட்சம் கிட்டிட

மூவுலகும் இடர் இயற்றும் அடல் அவுணன் உயிர் ஒழிய முனிவு கூர்ந்த
பூவை உறழ் திருமேனி அருட்கடவுள் அகன் மார்பில் பொலிந்து தோன்றி
தேவர் உலகினும் விளங்கும் புகழ் கொல்லா புரத்தில் இனிது சேர்ந்து வைகும்
பாவை இருதாள் தொழுது பழமறைதேர் குறுமுனிவன் பழிச்சுகின்றான்

கொழுதி இசை முரலும் தாமரை மென்பொருட்டில் உறை கொள்கை போல
மழை உறழும் திருமேனி மணிவண்ணன் இதயமலர் வைகும் மானே
முழு உலகும் இனிது ஈன்ற அருட்கொம்பே கரகமலம் முகிழ்த்து எந்நாளும்
கழிபெரும் காதலில் தொழுவேர் வினை தீர அருள் கொழிக்கும் கமலக்கண்ணாய்

கமலை திருமார்பன் மனைக்கிழத்தி செழுங்கமலக் கையாய் செய்ய
விமலை பசுங்கழை குழைக்கும் வேனிலான் தனை ஈன்ற விந்தை தூய
அமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலுள் அவதரித்தோய் அன்பர் நெஞ்சத்து
திமிரம் அகன்றிட ஒளிரும் செழுஞ்சுடரே என வணக்கம் செய்வான் மன்னோ

மடல் கமல நறும் பொகுட்டில் அரசிருக்கும் செந்துவர் வாய் மயிலே மற்றுன்
கடைக்கண் அருள் படைத்தன்றோ மணிவண்ணன் உலகெல்லாம் காவல்
பூண்டான்
படைத்தனன் நான்முகக் கிழவன் பசுங்குழவி மதிபுனைந்த பரமன் தானும்
துடைத்தனன் நின்பெரும் சீர்த்தி எம்மனோரால் எடுத்து சொல்லல் பாற்றோ

மல்லல் நெடும் புவியனைத்தும் பொது நீக்கி தனி புறக்கும் மன்னர் யாரும்
கல்வியினில் பேரறிவில் கட்டழகில் நிகரில்லா காட்சியோரும்
வெல்படையில் பகை துறந்து வெஞ்சமரில் வாகை புனை வீரர்தாம்
அல்லிமலர் பொருட்டுறையும் அணிஇழைநின் அருள்நோக்கம் அடைந்துள்ளாரே

செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்து ஒளிரும் எழில் மேனி திருவே வேளை
அங்கண் உலகில் இருள் துறக்கும் அலர்கதிராய் வெண்மதியாய் அமரர்கூட்டும்
பொங்கழலாய் உலக அளிக்கும் பூங்கொடியே நெடுங்கானில் பொருப்பில்
மண்ணில்
எங்குளைநீ அவனன்றோ மல்லல் வளம் சிறந்தோங்கி இருப்பதம்மா

என்று தமிழ்க் குறுமுனிவன் பன்னியோடும் இருநிலத்தில் இறைஞ்சலோடு
நன்று உனது துதி மகிழ்ந்தோம் நான்மறையோய் இத்துதியை நவின்றோர் யாரும்
பொன்றலரும் பெரும் போகம் நுகர்ந்திடுவர் இங்கு இதனை பொறித்த ஏடு
மன்றல் மனை அகத்திருப்பின் வறுமை தரு தவ்வை அவன் மருவல் செய்யாள்

இந்தத் துதியை பாராயணம் செய்பவர்கள் செல்வ வளம் பெறுவர். இந்த துதி எழுதி வைக்கப்பட்ட ஏடு வீட்டில் இருந்தால் போதும் அங்கே மூதேவி எந்தக் காலத்திலும் இருக்க மாட்டாள் என்கிறது காசிக் காண்டம்.

———

## திருமகள் திருமந்திரம்

ஆடி மாதத்தில் வெள்ளி மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் அம்மனுக்கு சிறப்பு பூஜை செய்வது வழக்கம். இந்த நாட்களில் லட்சுமி விரதம் இருக்கும் பெண்கள், அகத்தியர் அருளிய கீழ்கண்ட திருமகள் துதிப்பாடலை வாய்விட்டு படித்தாலும், மனதிற்குள் தியானித்தாலும் அந்தத் திருமகளின் அருளை எளிதில் பெறலாம்; வாழ்க்கையும் செழிக்கும்.

செங்கமலைப் பொலந்தாதில் திகழ்ந்தொளிரும்
எழில் மேனித் திருவே வேலை
அங்கண்உல கிருள் தூக்கும் அவர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க்கூட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே
நெடுஞ்கானில் பொருப்பில் மண்ணில்
எங்குளைநீ அவனன்றோ மல்லம் வளம்
சிறந்தோங்கி இருப்பதம்மா!

---

## சரஸ்வதி அருள் கிட்டிட சகலகலாவல்லி மாலை பதிகம்

வெண்தாமரைக்கன்றி நின்பதம் தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்தாமரைக்குத் தகாது கொலோ? சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகெள் கரும்பே சகலகலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள்வாய் பங்க யாசனத்தில்
கூடும் பசும் பொற்கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே!

அளிக்கும் செந்தமிழ்த் தெள்ளமுது ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும்படிக்கென்று கூடும் கொலோ உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாபமயிலே சகலகலாவல்லியே!

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொல் சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூல் கடலும்
தேக்கும் செந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலாவல்லியே!

பஞ்சப்பு இதம் தரு செய்ய பொற்பாத பங்கே ருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந்தாள் கமலத்
தஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைத்
தஞ்சத் தவிசு ஒத்து இருந்தாய் சகலகலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும்யான்
எண்ணும் பொழுது எளிது எய்த நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய் உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே! சகலகலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும் கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்வாய் நளினாசனம்சேர்
செல்விக்கு அரிதென்று ஒரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே! சகலகலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலம் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசு அன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே! சகலகலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் முளதோ சகலகலாவல்லியே!

---

## ஐந்து சக்திகள்!

பராசக்தி ஒருத்திதான். பக்தர்களுக்கு அருள் செய்ய வேண்டும் என்பதற்காக அவள் ஐந்துவிதமான வடிவங்களை ஏற்கிறாள்.

துர்காதேவி : வெற்றிச் செல்வி இவள். தன்னை நம்பியவரை பாதுகாப்பவள்; சிவனுக்கு உகந்தவள்; பல்வேறு வடிவங்களை உடையவள்.

லட்சுமிதேவி : செல்வத்தின் தெய்வம். எட்டு வகையான வடிவங்களை ஏற்று போற்றப்படுபவள். மகாவிஷ்ணுவின் துணைவி.

சரஸ்வதி தேவி : கல்வி தெய்வம். பிரம்மனின் துணைவி.

சாவித்திரி தேவி : வேதத்தின் உட்பொருள். அகஒளி தருபவள். பிரம்மனின் துணைவி.

ராதா தேவி : உடலில் உள்ள ஐந்து வகையான பிராண வாயுக்களின் தலைவி. கிருஷ்ணனின் மனைவி.

---

## அம்மன் அருள் வேண்டுமா?

ஆடி மாதம் வரும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காமாட்சி அம்மனை திருமணம் ஆகாத கன்னிப்பெண்கள் வணங்கினால், சட்டென்று அவர்களது திருமணம் கைகூடும்.

ஆடி மாதம் முழுவதும் மீனாட்சி அம்மனை வழிபட்டு வந்தால், குடும்பத்தில் உள்ள எப்பேர்ப்பட்ட பிரச்சினைகளும் தீர்ந்து விடும். இல்லத்தில் அமைதி தவழும்.

இதேபோல், ஆடிமாதம் முழுவதும் முத்து மாரியம்மனை வழிபட்டு வந்தால் திருஷ்டிகள் நீங்கும் என்பது நம்பிக்கை.

---

## கல்வியும், செல்வமும், ஞானமும் பெறவும் நாகதோஷம் அகலவும்

‘கண்பொலி நெற்றி யினான் திகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

விரித்தவன் நான்மறையைமிக்க விண்ணவர் வந்திறைஞ்ச
எரித்தவன் முப்புரங்கள் இயல் ஏழுலகில் லுயிரும்
பிரித்தவன் செஞ்சடைமேல் நிறை பேரொலி வெள்ளம் தன்னைத்
தரித்தவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

உடுத்தவன் மானுரிதோல் கழல் உள்கவல்லார் வினைகள்
கெடுத்து அருள் செய்ய வல்லான் கிளர் கீதமோர் நான்மறையான்
மடுத்தவன் நஞ்சு அமுதா மிக்க மாதவர் வேள்வியை முன்
தடுத்தவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்
போழ் இள வெண்மதியும் அனல் பொங்கு அரவும் புனைந்த
தாழ்சடையான் பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

விடம்படு கண்டத்தினான் இருள் வெள்வளை மங்கையொடும்
நடம்புரி கொள்கையினான் அவன் எம்மிறை சேருமிடம்
படம்புரி நாகமொடு திரை பன்மணியும் கொணரும்
தடம்புனல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

விடையுயர் வெல்கொடியான் அடி விண்ணொடு மண்ணுமெல்லாம்
புடைபட ஆடவல்லான் மிகு பூதமார் பல்படையான்
தொடை நவில் கொன்றையொடு வன்னி துன்னெருக்கும் அணிந்த
சடையவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

மலையவன் முன்பயந்த மட மாதையோர் கூறுடையான்
சிலைமலி வெங்கணையால் புரம் மூன்று அவை செற்று உகந்தான்
அலைமலி தண்புனலும் மதி ஆடரவும் அணிந்த
தலையவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

செற்றரக் கன் வலியைத் திருமெல் விரலால் அடர்த்து
முற்றும் வெண் ணீறணிந்த திருமேனியன் மும்மையினால்
புற்றரவு அம்புலியின் னுரி தோலொடு கோவணமும்
உற்றவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

வின்மலை நாணரவம் மிகு வெங்கனல் அம்பதனால்
புன்மைசெய் தானவர்தம் புரம் பொன்றுவித் தான் புனிதன்
நன் மலர் மேல் அயனும் நண்ணும் நாரணனும் அறியாத்
தன்மையன் ஊர்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

ஆதர் சமணரொடும் மடை ஐந்துகில் போர்த்துழலும்
நீதர் உரைக்கும் மொழி அவை கொள்ளன்மின் நின்மலனூர்
போதவிழ் பொய்கைதனுள் திகழ்புள்ளிரியப் பொழில்வாய்
தாதவிழும் பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

தண் வயல் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரத்துக்
கண்ணயலே பிறையான் அவன் தன்னை முன் காழியர்கோன்
நண்ணிய செந்தமிழான் மிகு ஞானசம் பந்தனல்ல
பண்ணியல் பாடல்வல்லார் அவர் தம்வினை பற்றறுமே’.

---

## சிவயோக சாரம்

ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித் திருந்தாலும் – மாதேவா
நின்செயலே என்று நினதருளா லே உணரின்
என் செயலே காண்கிலேனே.

எவ்வுயிருங் காக்கவோர் ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் நாமொருவர் அல்லவோ – வவ்விப்
பொருகுவதும் நெஞ்சே புழுங்குவதும் வேண்டாம்
வருகுவதும் தானே வரும்.

சும்மா தனுவருமோ சும்மா பிணிவருமோ
சும்மா வருமோ சுகதுக்கம் – நம்மால்முன்
செய்தவினைக் கீடாச் சிவனருள்செய் விப்பதென்றால்
எய்தவனை நாடி இரு.

கூட்டுவதும் கூட்டிப் பிரிப்பதுவும் ஒன்றொன்றை
ஆட்டுவதும் ஆட்டி அடக்குவதும் – காட்டுவதும்
காட்டி மறைப்பதுவும் கண்ணுதலோன் முன்னமைத்த
ஏட்டின் படியென் றிரு.

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் – சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

---

## நின்ற திருத்தாண்டகம் (உருத்திர தாண்டகம்)

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம் உருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப்
பிரளயத்துக் கப்பால் ஓர் அண்டமாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்து மாகி
எழும் சுடராய் எம் அடிகள் நின்றவாறே

கல்லாகிக் கனலாகிக் கானுமாகிக்
   காவிரியாய்க் கால் ஆறாய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
   புரமாகிப் புரமூன்றும் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
   சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீருமாகி
   நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
   கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த தொல்களிறு மாகிக்
   குரைகடலாயக் குரைகடற்கோர் கோமானுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
   நீள்விசும்பாய் நீள்விசும்பின் உச்சியாகி
ஏற்றானாய் ஏறூர்ந்த செல்வ னாகி
   யெழுஞ்சுடராய் எம் அடிகள் நின்ற வாறே

தீயாகி நீராகித் தின்மை யாகித்
   திசையாகி அத்திசைக்கோர் தெய்வமாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
   தாரகையும் ஞாயிறும் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
   இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மையாகி
   நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே

அங்கமாய் ஆதியாய் வேதமாகி
    அருமறையோடு ஐம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
    பல்மதியோ டாதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய் காவிரியாய்க் கன்னி யாகிக்
    கடலாகி மலையாகிக் கழியுமாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
    எழுஞ்சுடராய் எம் அடிகள் நின்ற வாறே

மாதா பிதாவாகி மக்க ளாகி
    மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரியாகிக்
    கொல்புலித் தோல் ஆடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
    புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானும் என நினைந்தார்க்கு எளிதே யாகி
    அழல் வண்ண வண்ணர்தாம் நின்றவாறே

ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
    அறிவாகி அழலாகி அவியுமாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
    நாதனாய் வேதத்தினுள்ளோ னாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
    புக்குளால் வாசமாய் நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
    செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே

நீராகி நீள அகலம் தானே யாகி
    நிழலாகி நீள்விசும்பின் உச்சியாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
    பெருமதில்கள் மூன்றினையும் எய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தோர் தம்மை யெல்லாம்
    ஆட்கொள்ள வல்லஎம் ஈசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாடலாகிப்
    பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே

மாலாகி நான்முகனாய் மாபூதமாய்
    மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி எண்டிசைக்கும் எல்லை யாகிப்
    பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப்
    பூதங்களாய்ப் புராணன்தானே யாகி
ஏலாதன வெல்லாம் ஏல்விப் பானாய்
    எழுஞ்சுடராய் எம் அடிகள் நின்ற வாறே

---

## பராசக்தி போற்றி

ஆதியும் நீயே அந்தமும் நீயே
அன்பும் நீயே அறமும் நீயே
உயிரும் நீயே உடலும் நீயே
ஊனும் நீயே உதிரமும் நீயே
பண்பும் நீயே பயனும் நீயே
விண்ணும் நீயே மண்ணும் நீயே
காற்றும் நீயே கடலும் நீயே
மலையும் நீயே மடுவும் நீயே

ஒலியும் நீயே ஒளியும் நீயே
வளியும் நீயே வெளியும் நீயே
பொன்னும் நீயே பொருளும் நீயே
அண்டமும் நீயே பிண்டமும் நீயே
பதியும் நீயே கதியும் நீயே
மதியும் நீயே விதியும் நீயே
இன்பமும் நீயே துன்பமும் நீயே
உண்மையும் நீயே பொய்மையும் நீயே
அடியும் நீயே முடியும் நீயே
முதலும் நீயே முடிவும் நீயே
அறிவும் நீயே ஆற்றலும் நீயே
மணமும் நீயே குணமும் நீயே
மோகமும் நீயே மோட்சமும் நீயே
உறவும் நீயே துறவும் நீயே
மறையும் நீயே திரையும் நீயே
குறையும் நீயே நிறையும் நீயே
ஏற்றமும் நீயே சீற்றமும் நீயே
சுற்றமும் நீயே சுகமும் நீயே
வீரமும் நீயே வெற்றியும் நீயே
வேதமும் நீயே நாதமும் நீயே
கீதமும் நீயே கீர்த்தியும் நீயே
உருவமும் நீயே அருவமும் நீயே
திருவும் நீயே தருவும் நீயே
கருணையும் நீயே கபடமும் நீயே
கனிவும் நீயே பணிவும் நீயே
பக்தியும் நீயே சக்தியும் நீயே
கரும்பும் நீயே கனியும் நீயே
கவியும் நீயே சுவையும் நீயே

| | |
|---|---|
| வேகமும் நீயே | விவேகமும் நீயே |
| ராகமும் நீயே | தாளமும் நீயே |
| இனிமையும் நீயே | வலிமையும் நீயே |
| பிணியும் நீயே | மருந்தும் நீயே |
| கோபமும் நீயே | தாபமும் நீயே |
| தீபமும் நீயே | பாவமும் நீயே |
| காடும் நீயே | நாடும் நீயே |
| வீடும் நீயே | வாசலும் நீயே |
| இரும்பும் நீயே | துரும்பும் நீயே |
| தந்திரம் நீயே | மந்திரம் நீயே |
| யந்திரம் நீயே | அந்தரம் நீயே |
| தானமும் நீயே | தயையும் நீயே |
| மானமும் நீயே | கானமும் நீயே |
| கல்வியும் நீயே | செல்வமும் நீயே |
| காதலும் நீயே | மோதலும் நீயே |
| தனமும் நீயே | தான்யமும் நீயே |
| மனமும் நீயே | மகிழ்ச்சியும் நீயே |

**நானும் நீயே நான்முகி தாயே**
**நல்லருள் செய்ய உடன் வருவாயே!**

---

## கோயில்களில் வழிபடும் முறை

**செய்யத்தக்கவை :**

1. நீராடி தூய உடைஉடுத்தி சமயச்சின்னங்களை அணிந்து ஆலயத்திற்குள் செல்ல வேண்டும்.
2. மலர்கள், தேங்காய், பழம், சூடம், சாம்பிராணி, எண்ணெய், நெய், இவைகளில் ஏதேனும் கொண்டு செல்ல வேண்டும்.

3. திருக்கோயிலுக்குள் நுழையும் முன்பாக கை, கால்களைக் கழுவி கோபுரத்தை வணங்கியபின் உள்ளே செல்ல வேண்டும். ஏனெனில் கோபுர தரினம் கோடி புண்ணியம் – பாவவிமோசனம்.

4. உள்ளே நுழைந்தவுடன் முதலில் தல விநாயகரை வழிபட வேண்டும்.

5. பிறகு கொடிமரம், பலிபீடம் ஆகியவற்றை வணங்கி, பின் இறைவன், இறைவி சன்னதிகளைச் சென்றடைய வேண்டும்.

6. விநாயகரை ஒருமுறையும், சிவமூர்த்தியை மூன்று முறையும், அம்பிகையை நான்குமுறையும் வலம் வர வேண்டும்.

7. பின்னர் பிரகாரத்தில் உள்ள தெய்வங்களையும் நவக்கிரகங்களையும் வழிபட வேண்டும்.

8. ஒவ்வொரு சன்னதியிலும் துதிக்க வேண்டும்.

9. கோயில் விளக்குகளில் எண்ணெய் விட்டு வழிபடுதல் மிகப்பெரும் புண்ணியம்.

10. திருக்கோயில் உள்ளே இருக்கும்போது உங்கள் எண்ணம், செயல், சொல் அனைத்தும் இறைவனைப்பற்றியே இருக்க வேண்டும்.

11. ஆலயத் தூய்மையே நீங்கள் இறைவனுக்கு செய்யக்கூடிய மிகப்பெரிய சேவையாகும்.

12. கடைசியாக கொடி மரத்தின் அருகில் வந்து பூமியில் விழுந்து வணங்கி இறைவனிடம் இருந்து விடைபெற வேண்டும்.

**செய்யத்தகாதவை :**

1. கோபுர வாயிலுக்குள் மிதியடிகளுடன் செல்லக்கூடாது.

2. கைலி போன்ற ஆடைகளை உடுத்தி வரக்கூடாது.

3. விக்கிரகங்களைத் தொட்டுக்கும்பிடுவது, மலரிடுவது, வெகு அருகில் சூடத்தைக் கொளுத்துவது ஆகியவைகளை செய்யக்கூடாது.

4. சமயச்சின்னங்களை அணியாமல் வெறும் நெற்றியோடு செல்லக்கூடாது.

5. பலி பீடத்திற்கும், இறைவனுக்கும் குறுக்கே செல்வதும், இடையில் பூமியில் விழுந்து வணங்குவதும் கூடாது.

6. ஒரு கையால் கும்பிடுவதும், ஒரு முறை வலம் வருதலும் கூடாது.

7. திருக்கோயிலுக்குள் மூர்த்திகளைத் தவிர யாரையும் கீழே விழுந்து வணங்கக் கூடாது.

8. இறைவனுக்கு அணிவித்த களைந்து போடப்பட்டிருக்கும் பூ, வில்வம் மற்றும் அபிஷேக தீர்த்தம் இவைகளை மிதிக்கக்கூடாது.

9. வம்பு பேசுதல், சண்டையிடுவது, வேகமாக நடத்தல், இடித்துத் தள்ளிக்கொண்டு போதல், எச்சில் துப்புதல் ஆகியவற்றை செய்யக்கூடாது.

10. திருக்கோயிலில் கொடுக்கும் விபூதி, குங்குமம், போன்ற பிரசாதங்களை தூண்களிலோ அல்லது கண்ட கண்ட இடங்களிலோ கொட்டுதல் கூடாது.

11. விளக்கு ஏற்றிவிட்டு எண்ணெயைத் தூணிலோ, சுவற்றிலோ தடவக்கூடாது.

12. பிரசாதங்களைச் சாப்பிட்டுவிட்டு இலை, தொன்னை போன்றவற்றை அவற்றிற்குரிய தொட்டிகளைத்தவிர வேறு இடங்களில் போடக்கூடாது.

---

# கோயிலில் சிறிது நேரம் உட்கார்ந்து வருவதன் பொருள்

கோயிலில் எத்தனை வாசல்கள் இருந்தாலும் ராஜகோபுரம் வழியாக உள்ளே செல்லுதலே சிறப்பு.

ராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் முதலில் பலிபீடம் உள்ளது. கோயில் படிதாண்டி உள்ளே சென்றவுடன் சிவ கணங்கள் நம்மிடம் வந்து சூழ்ந்து கொள்கின்றன. எனவே, அது முதல் ஆலய வழிபாடு முடிந்து கோபுர வாயிற் படியில் உட்காரும் வரை கண்டிப்பாக இறை உணர்வு தவிர வேறு எவ்வித தீய எண்ணங்களும் தோன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கோபுர வாயிற்படியில் திரும்ப வந்து நாம் அமரும்போது சிவகணங்கள் நம்மை விட்டு அகன்று விடும். இதுதான் சிறிது நேரம் உட்கார்ந்து வருவதன் பொருள்.

சிவன் ஆலயத்திற்குச் செல்கிறோம். தரிசனம் முடிந்து, திரும்பும்போது ஆலயத்தில் சற்று அமர்ந்துவிட்டு வரவேண்டும் என்பது ஐதீகம். ஏன் ?

ஒன்று – சிவன் கோயிலில் இருந்து, சிறு தூசி கூட நம் ஆடையில் ஒட்டி நம் வீட்டிற்கு வரக்கூடாது. சிவன் சொத்து குல நாசம் என்பார்கள்.

இரண்டாவது – சிவனின் பூத கணங்கள் நம்முடன், வீட்டிற்கு வந்து தொல்லை கொடுக்கும். அமர்ந்து விட்டு வந்தால் வருவதில்லையாம்.

விஷ்ணு ஆலயத்தில் எப்படி ?

அங்கு அமர்ந்து விட்டு வரக்கூடாது. ஏன் ?

விஷ்ணுவின் கருணையால், லட்சுமி நம்முடன், வீட்டிற்கு வருகிறாள் என்பது ஒரு கருத்து. எனவே விஷ்ணுகோயிலில் உட்கார வேண்டாமே !

– – –

## பிரதோஷ பிரார்த்தனைப் பாடல்

'அப்பனை நந்தியை ஆராவமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினம் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே.'

இது திருமூலரின் திருமந்திரப் பாடல். இதை பாடி இறைவனை வணங்கினால் எல்லா நன்மைகளும் பெறலாம்.

---

## எளிய, ஆனால் வலிமையான வாஸ்து அம்சங்கள்

1. கண்ணாடி, படுக்கை அறையில் இருக்கக் கூடாது.
2. கண்ணாடி வீட்டின் பிரதான கதவிற்கு நேர் இருக்கக் கூடாது.
3. சாப்பிடும் டைனிங் டேபிள் கண்ணாடியில் பிரதிபலிக்கக் கூடாது.
4. வாயிலுக்கு நேராக படுக்கக் கூடாது.
5. விளக்குமாறு கண்ணில் படும்படி இருக்கக் கூடாது.
6. பிரதான வாயில் கதவில் படும்படி, காலணிகளை வைக்கக் கூடாது.
7. பாத்ரூம் கதவுகள் மூடியே இருக்க வேண்டும்.
8. ஜன்னல்கள் நம் முதுகுப்புறம் இருக்கும்படி உட்காரக் கூடாது.

---

## துன்பங்கள் நீங்க...

வாழ்க்கை ஒரு கடல். கடலில் அலைகள் இருப்பது போல இன்பமும் துன்பமும் மாறிமாறி வந்துகொண்டிருப்பது இயற்கை. சிலருக்கு விதவிதமான துன்பங்கள் நேர்கின்றன. அவற்றால் பெரிதும் அல்லலுக்கு ஆளாகிறார்கள். துன்பத்திலிருந்து நீங்குவதற்கு வழி தேடுகிறார்கள்.

**துன்பங்கள் எதனால் நேர்கின்றன தெரியுமா ?**

பூர்வ ஜென்ம புண்ணிய பாவங்களால் தான் வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகிறது.

பிறக்கும் போதே இன்னார்க்கு இது என்று எழுதப்படுகிறது என்பது சாஸ்திரம்.

மொத்தமாக உள்ள வினைத் தொகுதியிலிருந்து கொஞ்சம் வினையை எடுத்துக்கொண்டு பிறவி அடைகிறோம்.

இந்த பிறவியில் நாம் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப புதிதாக வினையை ஈட்டுகிறோம்.

கொண்டு வந்தவற்றை அனுபவித்துத் தீர்க்கிறோம். எனவே வாழ்க்கையில் விளையும் எல்லாவற்றிற்கும் வினைகளே காரணம்.

இவைகள் கெட, வியாதிகள் அகல கோயிலுக்குத்தான் போக வேண்டும் என்று அவசியம் இல்லை.

பின்வரும் தேவாரத்தை காலையும் மாலையும் தவறாமல் கடவுள் முன் ஓதுங்கள். வியாதிகள் அகலும், வினைகள் நீங்கும். நல்ல பலன்கள் விளையும்.

**“சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்**
**பாழ் பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்**
**போழ் இள வெண்மதியும் அனல் பொங்கரவும் புனைந்த**
**தாழ் சடையான் பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே”**

---

## எளிமையான மந்திரம் ...

பேரும் ஊரும் இல்லாத பெருமானுக்கு ஆயிரம் திருநாமங்கள் சொல்வது வழக்கமாக இருக்கிறது. தேவர்கள் கூட ஆயிரம் நாமாக்களைச் சொல்லி ஆண்டவனை வழிபடுகிறார்களாம். ‘பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் எம்மான்’ என்பது தேவாரம். சிவபூஜை செய்பவர்கள் ஆயிரம் நாமாக்களோ, 300 நாமாக்களோ, 108 நாமாக்களோ சொல்லி வணங்குவார்கள். இதற்கெல்லாம் நேரம் இல்லையே என கவலைப் பட வேண்டியது இல்லை. கீழ்வரும் எட்டு திருநாமாக்களை மட்டும் சொல்லி வழிபட்டால் போதும். சிவன் அருள் சித்திக்கும். இந்த எட்டு மந்திரங்களுக்கு ‘அட்ட சிம்மாசன மந்திரம்’ என்று பெயர்.

‘ஓம் உமா மகேஸ் வராயநமஹ
ஓம் பர தேவதாய நமஹ
ஓம் த்ரியம்பகாய நமஹ
ஓம் சோம சுந்தரேசாயநமஹ
ஓம் சர்வாய நமஹ
ஓம் பீமாய நஹ
ஓம் மகா பலாய நஹ
ஓம் நீல கண்டாயநமஹ’

---

## ஐந்தெழுத்தின் பெருமை!

சிவத்தலங்களில் அருணாசலம் எனப்படும் திருவண்ணா மலையை விட உயர்ந்த தலம் இல்லை. சிவ தர்மங்களில் மகேஸ்வர பூஜையை விட உயர்ந்த பூஜை இல்லை. மந்திரங்களில் ‘பஞ்சாட்சரம்’ எனப்படும் ஐந்தெழுத்து மந்திரத்தை விட உயர்ந்தது வேறொன்றும் இல்லை என்பது சைவ சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள செய்தியாகும். சிவபெருமானின் அருள்பெற பஞ்சாட்சர ஜபம் செய்வது மிகவும் முக்கியம்.

இத்திருவைந்தெழுத்தில் 108 வகைகளை மந்திர சாஸ்திர நூல்கள் சொல்கின்றன. திருவைந்தெழுத்துடன் பிரணவ மந்திரமான 'ஓம்' என்பதை முதலில் சேர்த்து 'ஓம் சிவாய நம' என்றோ, 'ஓம் நமச்சிவாய' என்றோ ஜபம் செய்வார்கள். காலையும், மாலையும் ஜபம் செய்யலாம். ஒரு வியாழக்கிழமை அன்று அருகில் உள்ள சிவன் கோயிலில் இருக்கும் தட்சிணாமூர்த்தி சந்நிதியில் விளக்கேற்றி அங்கே ஜபத்தைத் தொடங்கி அதன்பின் இடைவிடாமல் ஜபம் செய்யலாம். 'சிவாயநம' என்று சிந்தித்து இருப்பவருக்கு அபாயம் ஒரு நாளும் வராது' என்பது ஆன்றோர் வாக்கு!

---

## ஆறுபடை வீடும் ஆறு ஆதாரங்களும் ...

மூலாதாரம் தொடங்கி ஆறு ஆதாரங்களை வியாபித்திருக்கிறது யோக சக்தி. இதை குண்டலினி சக்தி என்பார்கள். ஆலயங்கள் அனைத்தும் ஆறு ஆதாரங்களுடன் தொடர்புடையவைதான். முருகப் பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகளையும் ஆறு ஆதாரங்களுடன் உருவகப்படுத்துவார்கள்.

திருப்பரங்குன்றம் – மூலாதாரம்
திருச்செந்தூர் – ஸ்வாதிஷ்டானம்
பழனி – மணிபூரகம்
சுவாமிமலை – அனாகதம்
திருத்தணி – விசுத்தி
பழமுதிற்சோலை – ஆக்ஞை

ஆறுபடை வீடுகளையும் தரிசித்து ஆறெழுத்து மந்திரத்தை உச்சரிப்பவர்கள் இதயத்தில் குடியிருப்பான் குமரன் என்பார்கள். 'ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்து அன்பினுடன் கூறுமவர் சிந்தை குடிகொண்டேனே' என்பது பெரியோர் வாக்கு.

ஆறெழுத்து மந்திரத்தில் ஒவ்வொரு மந்திர எழுத்துக்கும் ஒரு சக்தி உண்டு.

**ச – லட்சுமி கடாட்சம்**

**ர – சரஸ்வதி அருள்**

**வ – போகம்**

**ண – பகைவரை வெல்லுதல்**

**ப – ம்ருத்யு ஜெயம்**

**வ – நோய் நீக்கம்**

'ஓம் சரவணபவ' எனச் சொல்ல இந்த எல்லாப் பேறுகளும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

– – –

## வீடு நலம் பெற விளக்கேற்றுவோம்

நமது கலாசாரத்தையும், பண்பாட்டையும் வழிபாட்டு முறைகளையும் பேணிப்பாதுகாக்கும் பெண்கள் ஆதிகாலம் தொட்டே அக்னி ரூபத்தில் ஒளியைத் துதித்துப் போற்றி வணங்கி வருகிறார்கள. குத்து விளக்கேற்றி ஜோதியை வழிபடுவது ஞானத்தைப் பெற்று ஆத்ம ஜோதியை வணங்குவதாகும். இதனால் பெண்களின் வாழ்க்கை குத்துவிளக்கின் ஒளியைப் போல் நெடிதுயர்ந்து ஒளிரும். கன்னிப்பெண்களுக்கு தகுந்த காலத்தில் திருமணம் நடக்கும். மாங்கல்ய பலத்தை அளிக்கும். சந்தான பாக்கியத்தைக் கொடுக்கும். குடும்பத்தில் எப்போதும் குதூகலம் இருக்கும்.

'விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கின் முன்னே வேதனை மாறும்'

என்று திருமூலர் பாடியுள்ளார்.

ஒளிமயமான குத்துவிளக்கில் ஜோதி வடிவமாக அம்பிகையை ஆராதரித்து வழிபடுவது நல்ல பலன்களைத் தரும். ஆதிபராசக்தியின் திருவடிவமே குத்துவிளக்கு. மங்களகரமான குத்துவிளக்கின் அடிப்பாகமாகிய தாமரை போன்ற பாதம் பிரம்மாவையும், நடுத்தண்டு திருமாலையும், திரிபோட்டு எண்ணை ஊற்றும் அகல் போன்ற பாகம் சிவனையும் குறிக்கும். விளக்கின் ஐந்து முகங்களும் ஈசனுடைய ஐந்து முகங்களாகிய சத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், ஆகோரம், ஈசானம் என்பவற்றைக் குறிக்கும். திருவிளக்கின் ஐந்து முகங்கள் விநாயகர், முருகன், ராமன், கிருஷ்ணன், இந்திரன் என்றும் கூறப்படுகிறது.

ஜோதிப்பிழம்பாய் பிரகாசிக்கும் சக்திச் சுடரே தீபலக்ஷ்மியாகிய ராஜராஜேஸ்வரி. பெண்கள் யாவரும் தீர்க்க ஆயுள், நல்ல கணவனை அடைதல், இன்பகரமான மணவாழ்க்கை, கணவனின் ஆயுள் விருத்தி, சந்தான சௌபாக்கியங்கள், சுகபோகங்கள் மற்றும் பொருட்செல்வம், அருட்செல்வங்களைப் பெறுவதற்கு வெள்ளிக் கிழமைகளில் ராஜராஜேஸ்வரியைக் குத்துவிளக்கில் முறைப்படி ஆவாகனம் செய்து பூஜை செய்து, தோத்திரப் பாடல்களைப் பாடி, ஆரத்தி எடுத்து வணங்க வேண்டியது அவசியமாகும். விளக்கின் சுடர்ப்பொறி பறந்தால் நாம் செய்யப்போகும் செயல்கள் வெற்றியடையும். விளக்கேற்றும் போது கீழ்க்கண்ட பாடலை சொல்லிப் பிரார்த்திக்க சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

‘சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே!
சுரிகுழல் பனைமடல முலைமடந்தை
பாதியே பரனே பால் கொள்வெண் கீற்றாய்
பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தம் மேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
‘அதெந்துவே’ என்று அருளாயோ.

———

## திருவிளக்கு துலக்க வேண்டிய தினங்கள்

வார நாட்களில் ஞாயிறு, திங்கள், வியாழன், சனி ஆகிய நாட்களில் விளக்கு தேய்த்தால் நலம் உண்டாகும் என்பது ஐதிகம்.

ஞாயிறு – கண்சம்பந்தமான நோய் தீரும்.

திங்கள் – அலைபாயும் மனம் அடங்கி அமைதி காணும்.

வியாழன் – குரு பார்க்க கோடி நன்மை அடைவதோடு மனக்கவலை தீரும்.

சனி – வாகன விபத்துகள் ஏற்படாமல் தடுத்து நம்மைக் காக்கும்.

செவ்வாய், புதன், வெள்ளிக் கிழமைகளில் விளக்கினைத தேய்த்தல் கூடாது.

---

## தீபம் ஏற்றுதல்

- ❖ நெய் தீபம் வீட்டின் நலத்தையும், சுகத்தையும் அதிகரிக்கச் செய்யும்.
- ❖ எள் எண்ணெய் தீபம் சகல பீடை பரிகாரங்களுக்கும் ஏற்றது.
- ❖ விளக்கெண்ணெய் தீபம் புகழ், உத்தியோகம், இல்லறத்தில் இனிமை, உறவினர் நலம் ஆகியன தரும்.
- ❖ மகாவிஷ்ணுவை பூஜிக்கும்போது நல்லெண்ணையையும்
- ❖ மகாலக்ஷ்மி வழிபாட்டின்போது பசு நெய்யும்
- ❖ சிவபூஜையின் போது இலுப்பை எண்ணையும்
- ❖ அம்பிகை வழிபாட்டின்போது பசு நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய் இவை கலந்து தீபம் ஏற்றலாம்.

## குத்து விளக்கு ஏற்றும்போது கவனிக்க

குத்துவிளக்கினை ஏற்றுவது சுபகாரியங்கள் அனைத்துக்கும் தொடக்கமாக அமையும் என்பது ஐதீகம். அதிலும் குறிப்பிட்ட வகையில் ஏற்றுவதால் நற்பலன்கள் இரட்டிப்பாகும்.

- கிழக்கு முகம் – துன்பங்கள் நீங்கும், இல்லத்தில் ஒற்றுமை ஏற்படும்.
- மேற்கு முகம் – கடன் தொல்லை, சனிதோஷம், பகை நீங்கும்.
- வடக்கு முகம் – சுபகாரியத் தடைகளும், வேலைவாய்ப்புத் தடையும் நீங்கும். சர்வமங்களம் உண்டாகும்.
- தெற்கு முகம் – இத்திசையில் ஒளியேற்றுவது சிறந்ததல்ல.
    - ஒரு முகம் – ஒளியேற்றுவதால் மத்திம பலன் உண்டாகும்.
    - இரு முகம் – ஒளியேற்றுவதால் குடும்ப ஒற்றுமை பெருகும்.
    - மூன்று முகம் – ஒளியேற்றுவதால் புத்திர பாக்கியம் உண்டாகும்.
    - நான்கு முகம் – ஒளியேற்றுவதால் பசு, பூமி, செல்வம் கிட்டும்.
    - ஐந்து முகம் – ஒளியேற்றுவதால் அனைத்து நலன்களும் கிட்டும்.

–––

## திருமணம் விரைவில் நடைபெற

‘கல்யாணம் பண்ணிப்பார், வீட்டைக் கட்டிப்பார்’ என்பார்கள். இவற்றைச் செய்து பார்க்கும்போது தான் அதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து கொள்ள முடியும். அதனால் தான் அன்றே இப்படி சொல்லி வைத்தார்கள்.

இன்று, சரியான வரன் அமையாத காரணத்தால் எத்தனையோ திருமணங்கள் தடைபட்டுக் கொண்டே போகின்றன. தங்கள் பிள்ளைகளின் திருமணம் தடைபட்டுக்கொண்டே போனால், பெற்றோர்கள் யாரும் கவலைப்பட வேண்டாம் என்கிறது ஆன்மிக சாஸ்திரம் ஒன்று. பெற்றோர்கள் மட்டும் தினமும் காலையில் **3** முறை ஒரு மந்திரத்தை சொல்லி, குலதெய்வத்திற்கு அர்ச்சனை செய்து வந்தால் திருமண தடை நீங்கும் என்கிறது அந்த ஆன்மிக சாஸ்திரம். அந்த மந்திரம்

“சுபப்ரணாதா பவதீ ஸ்ருதீநாம்
கண்டே ஷு வைகுண்ட பதிம்வராணாம்
பத்நாஸி நூ நம் மணி பாதரக்ஷே
மாங்கல்ய ஸூத்ரம் மணி ரஸ்மி ஜாலை”

– திருமணம் நடைபெற உள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள், அவரவர் குலதெய்வத்தை மனதில் நினைத்துக்கொண்டு இந்த மந்திரத்தை சொல்லி வந்தால் பிள்ளைகளின் திருமணம் விரைவில் நடைபெறும்.

---

## பெண்களுக்குத் திருமணம் விரைவாக நடக்க

மஞ்சள் துணியில் ஒரு ரூபாய் நாணயத்தை வைத்து முடிந்து அதை பூஜை அறையில் உள்ள பிள்ளையார் விக்ரகத்தின் கழுத்தில் மாலையாகப் போட்டுவிட்டு, பிள்ளையாருக்கு மஞ்சள், குங்குமம், பூ, அட்சதைகளால் பூஜை செய்து தூபதீபம் காட்டி நைவேத்தியம் செய்து பிள்ளையாரை பிரார்த்தித்து

‘பிள்ளையாரே என் பெண் கழுத்தில் மூன்று முடிச்சு விழட்டும்
விரைவில் உன் கழுத்திலுள்ள முடிச்சை அவிழ்க்கிறேன்’

என்று வேண்டிக் கொள்ள வேண்டும். பெண்ணின் திருமணம் முடிந்ததும் பிள்ளையாருக்கு கொழுக்கட்டை நைவேத்தியம் செய்ய வேண்டும். பின்னர் பிள்ளையாரின் கழுத்திலுள்ள மாலையின் முடிச்சை அவிழ்த்து அதிலுள்ள காசை அருகிலுள்ள பிள்ளையார் கோவில் உண்டியலில் சேர்த்துவிட்டு பிள்ளையாருக்கு ஒரு அர்ச்சனையும் செய்து விட்டு வரவேண்டும்.

கீழ்க்கண்ட பாடலையும் தினந்தோறும் துதித்து வந்தாலும் திருமணம் விரைவில் நடந்தேறும்.

சடையானை எவ்வுயிர்க்குந் தாயா னானைச்
சங்கரனைச் சசிகண்ட மவுலி யானை
விடையானை வேதியனை வெண்ணீற் றானை
விரவாதார் புரமூன்றும் எரியச் செற்ற
படையானைப் பங்கயத்து மேவி னானும்
பாம்பணையில் துயின்றானும் பரவுங் கோலம்
உடையானை "உடையானே தகுமோ இந்த
ஒள்ளிழையாள் உள்மெலிவு ?

பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான்; சூழ்ந்த
பொருவில் திருத் தொண்டர்குழாம் பொலிய ஆர்ப்ப
அங்கையினை உச்சியின்மேற் குவித்துக் கொண்டங்கு
அருட்காழிப் பிள்ளையார் அடியில் வீழ்ந்த
நங்கை அவள் தனை நயந்த நம்பி யோடு
நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம்
மங்குல்தவழ் சோலைமலி புகலி வேந்தர்
மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார்.

---

# திருமணம் விரைவில் கைகூட தரிசிக்க வேண்டிய தலங்கள்

## திருமணஞ்சேரி

## ஸ்ரீவாஞ்சியம்

திருமகள், திருமாலை திருமணம் செய்து கொண்ட தலம். எல்லா தோஷங்களுக்கும் பரிகார தலம்.

## திருவீழிமிழலை

ஈஸ்வரன் இங்கு உமையவளை திருமணம் செய்து கொண்டு ரிஷிகளுக்கு காட்சி தந்த தலம். திருமணத் தடை நீங்க மிகச்சிறந்த தலம்.

## திருவெண்காடு

இத்தலம் வெகு அற்புதச் சக்திகள் வாய்ந்தது. திருமண தோஷங்களை விலக்கும் தலமாகவும் விளங்குகிறது.

## திருத்தெங்கூர்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 15 கி.மீ. தொலைவில் உள்ள தலம். நவக்கிரகங்கள் வழிபட்ட ஒன்பது லிங்கங்களும் ஒரே அம்பாளுடன் காட்சி அருளும் தலம்.

## திருவேள்விக்குடி

மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள குத்தாலத்திலிருந்து வடக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள தலம். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண தோஷம் விலக, திருமணம் விரைவில் நடைபெற இறைவன் திருமணக் கோலத்துடன் காட்சி தரும் இத்தலத்தை தரிசிக்கலாம்.

### திருப்பாச்சேத்தி

மதுரையிலிருந்து 30 கி.மீ. தூரத்திலுள்ளது. மகாலட்சுமி இங்கே தியானித்து மகாவிஷ்ணுவை சுயரூபம் அடையச் செய்து திருமணம் செய்து கொண்ட தலம். திருமணத்தடைகள் நீங்கி நல்வாழ்வு அளிக்கும் தலம்.

## பிரதோஷ காலத்தில் ஆண் பெண் இருவரும் கீழ் வரும் பாடலை பக்தியுடன் சொல்லி வந்தால் விரைவில் திருமணம் நடக்கும்

'உளத்திடை இவ்வாறு உன்னி
உவந்திலன் எனையென்றாலும்
களிப்புறும் யானே சென்று
கலப்பன் என்று "அமலை" யாவும்
அளிப்பவன் அலங்கல் சூட்டி
அருமறை "முதலி" மார்பின்
துளிப்புயன மணக்கு மின்னில்
தோய்ந்தனன் துயக்கு அற்றாள்'

தஞ்சாவூரிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் திருக்கண்டியூரில் இருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ள திருவேதிக்குடியில் குடிகொண்டிருக்கும் வேதபுரீஸ்வரர் மீது திருஞானசம்பந்தர் "நீறுவரி ஆடு அரவொரு ஆமை" எனத்துவங்கும் பத்து பதிகங்களையும் ஆண்களும், பெண்களும் மனதாரப் பாடி இறைவனைத் தொழுது வந்தால் விரைவில் திருமணம் நடந்தேறும்.

இறைவனும், இறைவியும் திருமணக் கோலத்தில் அருளும் எல்லா தலங்களுமே நல்ல வரனை அருளும் வல்லமை பெற்றவை. 'தாயே, உனக்கு அமைந்த கணவரைப் போன்று எனக்கும் அருளுங்கள்' என்று பிரார்த்தனை செய்யுங்கள். மேலும், அகத்தியர்

எந்தெந்த ஆலயத்தில் எல்லாம் சிவன் – பார்வதி திருமணக் கோலத்தை தரிசித்தார் என்று பார்த்து தரிசியுங்கள். பொதுவாக எல்லோரும் திருமணஞ்சேரி சென்று வேண்டுவார்கள். அதோடு வேதாரண்யம், கும்பகோணத்திற்கு அருகேயுள்ள திருநல்லூர், மதுரை மீனாட்சியம்மன், காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் என்று இதர தலங்களுக்கும் செல்லலாம். ஏனெனில் வேதாரண்யம், திருநல்லூர், காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் ஆலயங்களில் சிவலிங்கத்திற்குப் பின்னால் சிவனும் பார்வதியும் சேர்ந்து அமர்ந்து கல்யாணக் கோலத்தில் காட்சி கொடுப்பார்கள். வேதாரண்யம் அகத்தியருக்கு சிவபார்வதி திருமணக் காட்சி கிடைத்த தலமாகும். மேலே சொன்ன தலங்களில் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். நல்ல வரன் அமைந்து மணவாழ்க்கை சிறப்பதை உணர்வீர்கள்.

–––

## குழந்தை வரம் வேண்டி

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசத்திலிருந்து வலங்கைமான் செல்லும் வழியில் நல்லூர் என்ற ஊரில் கல்யாண சுந்தரேசுவரர் கோயிலின் வெளிப்பிரகாரத்தில் அருளாட்சி புரியும் நல்லூர் காளியம்மனை கருத்தரிக்காத பெண்கள்

**‘வளைகாப்பு உன் சன்னதியிலேயே நடத்துகிறேன் தாயே பிள்ளை வரம் எனக்குக் கொடு’**

என வேண்டிக் கொண்டால் அன்னையவள் அருள் தருவாள். வாரிசு மட்டுமின்றி நியாயமான கோரிக்கைகள் எதுவாயினும் வாரி வாரி வழங்கிடுவாள் இந்த நல்லூர் காளியம்மன்.

குருவாயூர் சென்று கிருஷ்ணபரமாத்மாவை தரிசித்து குழந்தை பிறந்தால் உன் சன்னதியிலேயே குழந்தைச் சோறு கொடுக்கிறேன் என வேண்டி வந்தால் குழந்தைச் செல்வம் கிடைக்கும்.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள அனுமார் கோதண்டராமசாமி கோவிலுக்கு ராமநவமிக்கு முதல்நாள் காலையில் வந்து ராமர், அனுமன், சக்கரத்தாழ்வார், பாண்டுரங்க கிருஷ்ணன் ஆகியோருக்கு அர்ச்சனை செய்து அன்று பகல் முழுவதும் விரதம் இருந்து மாலையில் நடைபெறும் ‘புத்ரகாமேஷ்டி யாகத்தில் கலந்து கொண்டு அங்கு தரப்படும் பாயாசத்தை அருந்தி விரதத்தை முடிக்க வேண்டும். அவ்வாறு வழிபடுவோருக்கு பத்திரப்பேறு கிடைக்கும்.

ராகு தோஷத்தினால் குழந்தை பாக்யம் தடைபடும் தம்பதிகள் கீழைத் திருமணஞ்சேரி சப்த சாகர தீர்த்தத்தில் நீராடி இக்கோயிலில் உள்ள ராகு பகவானுக்கு பால் அபிஷேகம் செய்து பால் பொங்கல் நிவேதனம் செய்து அதைச் சாப்பிட்டு வர தோஷம் நீங்கி புத்திரப்பேறு கிடைக்கும்.

---

## சந்தான பாக்கியம் தரும் சந்தான கோபாலன்கள்

குழந்தை வரம் வேண்டுவோர்க்கு அந்த பாக்கியம் தருவதில் முக்கியமான கடவுளாகச் சொல்லப்படுபவர் சின்னஞ்சிறு பாலகனாகக் காட்சி தரும் சந்தான கோபாலன். பெரும்பாலான வைணவத் தலங்களில் சந்தோஷ சிரிப்புடன் சந்தான கோபாலன் காட்சி அளிக்கிறார். சர்ப்ப தோஷத்தால் சந்ததி வளர்ச்சி தடைபடுவோர்கூட அரவ அணையில் படுத்திருக்கும் அனந்தசயனை வழிபட்டால் கருப்பை நிறையும் என்பது ஐதீகம்.

குழந்தை வரம் வேண்டும் தம்பதியர் கீழே குறிப்பிட்டுள்ள பெருமாள் தலங்களுக்குச் சென்று மழலையாய் காட்சி தரும் சந்தானகோபாலன் விக்கிரகத்தை தம் மடி மீது இருத்திக்கொண்டு, அந்தந்த ஆலய வழிமுறைப்படி பூஜித்து வணங்கினால் புத்திரபாக்கியம் கிட்டும் என்பது புராணகாலம் முதல் இருந்து வரும் நம்பிக்கை. எந்தெந்த கோயிலுக்கு முடியுமோ

அந்தந்த கோயிலுக்கு போய் வழிபட்டு வாருங்கள். சந்தானபாக்கியம் தரும் சந்தானகோபாலனை பக்தியோடு தரிசியுங்கள். சந்தானகோபாலன் அருளால் சீக்கிரமே உங்கள் இல்லத்தில் மழலையின் குரல் ஒலிக்கட்டும்.

- ராமேஸ்வரம் அருகில் உள்ள திருப்புல்லாணி தலத்தில் உள்ள புருஷோத்தமன்.
- மயிலாடுதுறையிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள சிறுபுலியூர் தலத்தில் கிருபாசமுத்திரப் பெருமாள் கோயிலில் உள்ள சின்னக் கண்ணன் மற்றும் தேரழுந்தூர் தலத்தில் ஆமருவியப்பன் கோயிலில் உள்ள குழந்தை கிருஷ்ணன்.
- சென்னை பாரீஸ் கார்னர் தைலப்ப முதலி தெருவில் உள்ள பிரசன்ன வெங்கடாஜலபதி கோயிலில் உள்ள கண்ணன்.
- சென்னை அண்ணாநகர் முகப்பேரில் உள்ள சந்தான சீனிவாசன் கோயிலில் உள்ள குழந்தை கோபாலன்.
- சென்னை வேளச்சேரி அருகில் இருக்கும் மேடவாக்கம் சீனிவாச பெருமாள் கோயிலில் இருக்கும் குட்டிக் கண்ணன்.
- சென்னை நந்தம்பாக்கத்தில் சேது க்ஷேத்ரம் என்னும் கோபாலன் கோயிலில் உள்ள சந்தான கோபாலன்.
- காஞ்சிபுரம் பவளவண்ணர் கோயிலில் இருக்கும் பாலகிருஷ்ணன்.
- மன்னார்குடி ராஜகோபாலன் கோயிலில் இருக்கும் மழலை கோபாலன்.
- கர்நாடகா சென்னபட்டணம் அருகே உள்ள தொட்டமளூர் கோயிலில் உள்ள குட்டிக் கண்ணன்.

## சந்தான கோபால கிருஷ்ணன் சுலோகம்

க்லாம்–லீம்–க்லும்
‘தேவகி ஸுத கோவிந்த வாசுதேவ ஜகத்பதே
தேஹிமே தநயம் கிருஷ்ணத்வாம ஹம் சரணம கத :
தேவ தேவ ஜகன்னாத கோத்ர விருத்திகா ப்ரபோ
தேஹிமே தநயம் சீக்ரம் ஆயுஷ்மந்தம் யஸஸ்வினம்’

தினமும் காலையில் ஒரு பலகையில் கோலம் போட்டு ஐந்து முகம் கொண்ட விளக்கேற்றி கிருஷ்ணர் படமோ, விக்ரகமோ வைத்து மேற்படி சுலோகத்தை 12 தரம் சொல்லி 12 தரம் நமஸ்கரித்து ஒரு ஸ்பூன் வெண்ணையோ, பால் பழமோ நைவேத்தியம் செய்யவும். நம்பிக்கையும் பக்தியும் தான் முக்கியம்.

---

## சுக பிரசவத்திற்கு

கர்ப்பிணிப் பெண்கள் திருநாவுக்கரசு சுவாமிகள் திருச்சியில் எழுந்தருளியுள்ள தாயுமானவர் மீது பாடிய கீழ்க்கண்ட பாடலை தினமும் மூன்று முறை சொல்லி வணங்கி வந்தால் தாயுமானவர் அருளால் சுகப்பிரசவம் ஆகி எல்லா நலன்களும் கிட்டும்.

‘மாட்டு வார்குழு லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறும் இறைவனார்
கட்டு நித்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே

அரிய யன்தலை வெட்டிவட் டாடினார்
அரிய யன்தொழு தேத்தும் அரும்பொருள்
பெரிய வன்சிராப் பள்ளியைப் பேணுவார்
அரிய யன்தொழு அங்கிருப் பார்களே

அரிச்சி ராப்பகல் ஐவரால் ஆட்கொண்டு
சுரிச்சி ராது நெஞ்சே யொன்று சொல்லக்கேள்
திருச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே.

தாயுமாய் எனக்கேதலை கண்ணுமாய்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னாரென நம்வினை நாசமே'.

குருவாயூர் கிருஷ்ணனுக்கு தைலாபிஷேகம் செய்யப்பட்டு, அத்தைலத்தை கோவில் அலுவலகத்திலிருந்து வாங்கி கர்ப்பிணிப் பெண்கள் வயிற்றில் சிறிது தடவி, சிறிது உள்ளுக்கும் எடுத்துக் கொண்டால் கிருஷ்ணன் அருளால் சுகப்பிரசவம் உறுதி.

---

## நோய்களைத் தீர்க்கும் தலங்கள்

ஆரோக்கியமாக வாழ்வதே இன்பம். அப்படி ஆரோக்கியமாக வாழ நம் உடல் நலத்தை பேணுவதோடு சில சிறப்புத் தலங்களில் இறைவழிபாடு செய்வது, பிணி யாவும் போக்கி நலமுடன் வாழ வகை செய்யும். அப்படி நோய் தீர்க்கும் ஆலயங்களில் அருள்பாலிக்கும் தெய்வங்கள் இவை :

### வைத்தீஸ்வரன் கோயில்-வைத்தியநாதர்

இறைவனே பிறவி மருத்துவனாக பேரருள் புரியும் தலம்– வைத்தீஸ்வரன் கோயில். இங்கு பிரசாதமாக தரும் திருச்சாந்து உருண்டையை உண்போர் பிணியாவும் நீங்கி பெருவாழ்வு வாழ்வர் என்பது ஐதீகம். அம்பிகை தையல்நாயகியின் கையில் உள்ள தைலப்பாத்திரத்தில் அம்ருதசஞ்சீவினியுடன், வில்வமரத்தின் அடியில் உள்ள மண் சேர்த்து அருமருந்தாக்கி 4448 வகையான பிணிகளுக்கு இறைவனே அளிப்பதாகச் சொல்கிறது தலபுராணம்.

## ஓட்டப்பிடாரம் உலகாண்ட ஈஸ்வரி

நோய்களை ஓட்டுவதால் இவள் அருள்பாலிக்கும் தலத்துக்கே ஒட்டப்பிடாரம் என்று பெயர். காலரா, அம்மை போன்ற நோய்கள் வராமல் காவல் தெய்வமுமாய் நின்று காப்பவள் இவளே. ஊர் மக்களை மட்டுமின்றி உலகத்து மக்கள் யாவரையுமே பிணிகளிலிருந்து காப்பவள் உலகாண்ட – உலகாளும் ஈஸ்வரி.

## திருக்காரவாசல் கண்ணாயிரநாதர்

கண்களில் ஏதாவது பிரச்சனை என்றால் உடனே கண் மருத்துவரைப் பாருங்கள். அடுத்து கண்ணாயிரநாதனாக திருக்கரவாசலில் காட்சி தரும் முக்கண்ணனை தரிசியுங்கள். திங்கட்கிழமை மற்றும் பௌர்ணமி தினங்களில் இங்கு இறைவனுக்கு அபிஷேகம் செய்து தரப்படும் தைலமே கண்களுக்கு அருமருந்து என்கின்றனர்.

## கொடுங்கல்லூர் வசூரிமாலா

கேரளாவில் கொடுங்கல்லூர் பகவதி கோயிலில் உள்ள வைசூரிமாலா, அம்மை, மணல்வாரி, வைரஸ்களால் ஏற்படும் தொற்று நோய்களை அண்டவிடாமலும், விரைவாகக் குணமாகச் செய்பவள் என்பதாலும் ‘வைசூரிமாலா’ என ஆனாள். இவளை வேண்டி, மஞ்சள் பொடியை அர்ச்சித்து பிரசாதமாகப் பெற்றுப் பூசினால் நோய்களின் கடுமை நீங்கும்.

## குணசீலம் பிரசன்ன வெங்கடாஜலபதி

ஆரோக்கியம் மட்டுமல்லாது மனநலம் காத்திடும் மகத்தானவராக பெருமாள் குடிகொண்டிருக்கும் தலம் குணசீலம். வேண்டுவோர் வேண்டுவன தரும் இந்த வேங்கடவன் மனதிற்கு

மாமருந்தாகவும் திகழ்கிறான் என்பதால் மனநலப்பிரச்சனை உள்ளவர்கள் மட்டுமின்றி மகிழ்ச்சி என்றும் மனதில் நிலைக்க வேண்டும் என விரும்புவோரும் இவரை வணங்கிடல் சிறப்பு.

## திருவான்மியூர் மருந்தீசர்

மகேசனே மருந்தாக விளங்கும் மகத்தான தலம் மருந்தீஸ்வரம் என்னும் திருவான்மியூர். இறைவனே மருந்து என்பதால், இவரைத் தரிசித்தாலே போதும், நோய்கள் யாவும் விரைவில் நீங்கும். அகத்தியருக்கு மூலிகைகள் பற்றிய ரகசியத்தை ஈசன் உபதேசித்த தலம்.

---

## செய்ய வேண்டியவையும், செய்யக் கூடாதவையும்
## செய்ய வேண்டியவை

**பிறரை வணங்குதல் :** நமக்குச் சமமானவர என்றால், நமது கூப்பிய கைகளின் விரல்களை அவர்களுக்கு எதிரில் நீட்டி வணங்கலாம். தேவதைகளை வணங்கும் பொழுது மனதிலிருந்து வரும் மரியாதை என்பதைக் காட்ட மார்புடன் ஒட்டி, நிமிர்ந்த கைகளுடன் கூப்பி வணங்க வேண்டும். குருவை சிரம்மேல் கைகூப்பி வணங்க வேண்டும்.

**உண்ணும் பொழுது :** இலைநுனி, உண்பவரின் இடக்கைப் பக்கம் அமைய வேண்டும். இலையின் அடிப்பாகம் உண்பவரின் வலது கைப்பக்கம் இருக்க வேண்டும். இலையை நன்கு விரித்துப் போடவேண்டும்.

கிழக்கு நோக்கி அமர்ந்து சாப்பிட்டால் ஆயுளும், தெற்கு நோக்கில் புகழும், மேற்கு நோக்கில் செல்வமும் வளரும். ஒரு மூலையைப் பார்த்து அமர்ந்து சாப்பிடக்கூடாது.

சாப்பிடும் பொழுது பேசக் கூடாது. நடுவில் நீர் குடிக்கக் கூடாது. இறைவனை நினைத்துச் செயல்பட வேண்டும்.

**வலம் வருதல் :** அரசமரம், ஆலமரம், துறவிகள் உள்ள மடங்கள், திருமாளிகை ஆகியவற்றை விலகி நின்று சுற்றிவர வேண்டும். பகவானின் விக்ரகங்கள் அருகே நெருங்கிச் சென்று வலம் வரவேண்டும். திங்கட் கிழமையன்று அமாவாசை வந்தால் அன்று அரச மரத்தைப் பிரதட்சிணம் செய்வது மிகவும் விசேஷம். பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகியோர் அரசமரத்தில் இருப்பதாக நம் மதம் கூறுகிறது. அரச மரத்தைச் சுற்றும் பொழுது மந்திரங்களைச் சொல்வது மிகவும் பலன் தரும்.

**கொடுக்கும் முறை :** எதையும் அன்பு, அக்கறையுடன் தரவேண்டும். நாம் அதிகம் செய்துவிடவில்லை என்னும் நாணத்துடனும், பிறரது கௌரவத்தைக் கெடுக்கவில்லை என்னும் பயத்துடனும், வாங்குவோர் மகிழ்ச்சி கண்டு மனநிறைவுடனும் கொடுக்க வேண்டும்.

## செய்யக் கூடாதவை

**புண்ணிய தீர்த்தங்களில் :** புண்ணிய தீர்த்தங்களில் நேரடியாக உடனே காலை வைக்கக் கூடாது. தலையில் நீரைத் தெளித்துக் கொண்டு பின்பு தான் கால்களைக் கழுவவோ, குளிக்கவோ வேண்டும். காறித் துப்பக் கூடாது. குளத்தில் கல்லை வீசி எறியக் கூடாது.

**மிச்சம் கூடாது :** அக்னி சேஷம் : வீட்டில் இரவில் நெருப்பை நன்கு அணைத்து விட வேண்டும்.

குணசேஷம் : கடன் இருந்தால் முழுமையாகத் தீர்த்துவிட வேண்டும்.

சத்ருசேஷம் : பகைவனை அடியோடு அழித்து விட வேண்டும்.

**வெந்நீரில் குளிப்பது :** அமாவாசை, ஞாயிற்றுக் கிழமை, சங்கராந்தி நாட்களிலும், பிறப்பு, இறப்புக்களால் ஏற்படும் ‘தீட்டு’ எனப்படும் சூதகம் நேரங்களிலும் வெந்நீரில் ஸ்நானம் கூடாது.

**விரத நாட்களில் :** உபவாச விரதம் உள்ள நாட்களில் அடிக்கடி நீர் குடித்தல் கூடாது. பித்த நீர், வாயில் வரும்படி பல்துலக்கக் கூடாது. தாம்பூலம் தரித்தல், பகலில் தூங்குதல், சண்டை போடுதல் கூடாது.

**இரவில் கூடாது :** இரவில் துணி துவைக்கக் கூடாது. குப்பையை வெளியே கொட்டக் கூடாது. மரத்தின் நிழலில் தங்கக் கூடாது. பூமியைக் கீறுவது, வெட்டுவது, உழுவது கூடாது. ரகசியம் பேசக் கூடாது. எல்லாமே பாதுகாப்பு, அறிவியல் சம்பந்தப்பட்டவை.

**சங்கு அபிஷேகம் :** சங்கிற்குள், தண்ணீரை, உத்தரிணியினால் எடுத்துவிட வேண்டுமே தவிர, சங்கைத் தண்ணீருக்குள் மூழ்கச் செய்து நீரை நிரப்புமாறு செய்யக் கூடாது. சங்கின் பின்பகுதி பட்ட நீர் பூஜைக்கு ஆகாது.

**ஈர உடை :** பூஜை செய்யும் பொழுதோ, கடவுளை வணங்கும் பொழுதோ ஈர உடையுடனோ, ஓர் ஆடையுடனோ செய்தல் கூடாது. ஆனால் வேறு வேட்டி கைவசம் இல்லாத பொழுது, ஈர உடையை "ஓம் அஸ்தராய பட்" என்று ஏழுமுறை உதறி, உலந்ததாகக் கருதி, பிறகு உடுத்திக் கொண்டு வணங்கலாம்.

**கோயிலில் :** கோயில் மூடி இருக்கும் பொழுதும், உற்சவர் உலா வரும் பொழுதும், திருமஞ்சன காலத்திலும், திரை போட்டிருக்கும் பொழுதும் திருக்கோயிலுக்குள் தரிசனம் செய்யக் கூடாது.

**எண்ணெய் முழுக்கு :** ஆண்கள் புதன், சனிக்கிழமைகளிலும், பெண்கள் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளிலும் எண்ணெய் ஸ்நானம் செய்யலாம். அமாவாசை, பௌர்ணமி, மாதப் பிறப்பு, ஜென்ம நட்சத்திரம் ஆகிய நாட்களில் எண்ணெய் ஸ்நானம் கூடாது. தலையில் தேய்த்த எண்ணெயை வழித்து உடம்பில் பூசக் கூடாது.

**நீருக்குள் :** நீரில் எந்தவகை அசுத்தங்களையும் செய்யக் கூடாது. நீருக்குள் மறைந்திருப்பது அக்னி என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தவறு செய்தால் சுட்டுவிடும். தண்ணீர், 'சர்வ தேவதா சொரூபம்' என்கிறது வேதம். தண்ணீர் – தேவதைகளின் இருப்பிடம். எந்தக் கடவுளையும் பூர்ணகும்பத்தில் எளிதில் ஆவாகனம் செய்யலாம். நீருக்குத் தீட்டு கிடையாது.

**வணங்கக் கூடாத சமயங்கள் :** கோயிலுக்குள் பெரியோர்களை வணங்கக் கூடாது. கைகூப்பினால் போதும்.

படுத்துக் கொண்டிருப்பவர்களையும், ஈரத் துணியுடன் இருப்பவர்களையும் வணங்கக் கூடாது.

தம்மைக் காட்டிலும் சிறியவர்களை வணங்கக் கூடாது.

**கோலம் :** அதிகாலையில் தண்ணீர் தெளித்து, அதன்மீது அரிசி மாவினால் வெண்மையாகக் கோலம் போடுவதும், முக்கிய காலங்களில் செம்மண் (காவி) கோலம் போடுவதும் பெருமாள், லட்சுமி அருளை நன்கு பெற்றுத் தரும்.

யாராவது வெளியில் புறப்படுவதாக இருந்தால் அதற்கு முன்பே கோலம் போட வேண்டும்.

வாசல் படிக்கட்டுகள், துளசி மாடம், பூஜை அறைகளில் கோலம் போடவேண்டும். ஆனால், சில கட்டுப்பாடுகளும் உண்டு. சுபகாரியங்களுக்கு ஒரு கோடு கோலம் கூடாது. அசுபகாரியங்களுக்கு இரட்டைக்கோடு கோலம் கூடாது. வேலையாட்களைக் கொண்டு கோலம் போடக் கூடாது.

**சமையல், பரிமாறுதல் :** அக்னியை வாயால் ஊதிப் பெரிதாக்கவோ, அணைக்கவோ கூடாது. உரல், அம்மி, உலக்கை, வாசற்படி, முறம் ஆகியவற்றின் மீது உட்காரக் கூடாது. இரவில்

மிஞ்சிய உணவை மண்பாத்திரங்களில் பாதுகாக்கக் கூடாது. சாதம், உப்பு, நெய், போன்றவற்றை கையால் பரிமாறக் கூடாது. ஒருவர் உண்ண ஆரம்பித்த பிறகு உப்பு, நெய் போன்றவற்றைப் பரிமாறக்கூடாது.

இவற்றைப் பின்பற்றினால் பல நன்மைகள் நமக்குக் கிடைக்கும். எல்லாமே அறிவியல் சம்பந்தப்பட்டவை என்பதும் எளிதில் புரியும்.

---

## பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகள்

- ❖ நெற்றியில் குங்குமம் இல்லாமல் ஒரு போதும் இருக்கக்கூடாது.
- ❖ இரண்டு கைகளினாலும் தலையைச் சொரியக்கூடாது.
- ❖ இரவில் வீட்டைப் பெருக்கக் கூடாது. பெருக்கினாலும் குப்பையை வெளியே கொட்டக்கூடாது.
- ❖ கைகளினால் அன்னத்தையோ, காய்கறிகளையோ பரிமாறக் கூடாது. தன் கணவனின் அனுமதியின் பேரில் தான் தான தர்மங்கள், உபவாசம், விரதம் இவைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
- ❖ வீட்டில் எந்தப்பொருளையும் இல்லை இல்லை என்று சொல்லக் கூடாது. தேவையான பொருட்களை மட்டுமே சொல்லி வாங்கி வரும்படி கூற வேண்டும்.
- ❖ எந்தக் குறைகளையும் எண்ணிக் கண்ணீர் விடக்கூடாது.
- ❖ வீட்டிற்கு சுமங்கலிகள் வந்தால் மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டும்.
- ❖ பூ, பழம், மஞ்சள், குங்குமம் கொடுத்து இனிமையாகப் பேசி உபசரிக்க வேண்டும்.
- ❖ வாயிற்படியின் மேல் உட்காரக் கூடாது.

- அக்னியை வாயில் ஊதி எழுப்பவோ, அணைக்கவோ கூடாது.
- தனக்கு கொடுக்கப்படும் வெற்றிலை, பாக்கு, புஷ்பம், பழம் ஆகியவற்றை அலட்சியமாய் வாங்கக்கூடாது.
- மாலை நேரங்களில் தீபம் ஏற்றி வழிபடும் பெண்மணிக்கு ஆசி கூறத் தேவர்கள் நம் இல்லங்களுக்கு வருகை தருகிறார்கள். ஆதலால் தீபம் வைக்கும் நேரத்தில் பெண்கள் வெளியில் வேறு இடங்களுக்கு செல்லக்கூடாது.

---

## இனிய இல்லறம் அமைய...

இல்லறம் நல்லறம், இல்லறவாதியே துறவியர்களுக்கும், முன்னோர்களுக்கும் உற்ற துணையாக இருந்து வாழ்பவன். நல்ல முறையில் இல்லறம் ஆற்றினால் வானுலகத்தில் உள்ள தெய்வத்துக்குச் சமமாகப் போற்றப்படுவான் என்று நீதி நூல்கள் சொல்கின்றன. ‘அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போஒய்ப் பெறுவதெவன்’ என்கிறது திருக்குறள்.

காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்ட இல்வாழ்க்கை விதியின் பயனாகத்தான் அமைகிறது. பிறந்த போது ஜாதகத்தில் சரியான அமைப்புகளுடன் கிரகங்கள் அமையும் பட்சத்தில் இல்லற வாழ்க்கை எளிதில் அமைகிறது. சிலருக்கு ஜாதக தோஷங்களின் காரணமாக தள்ளிப் போகிறது – அமையாமலும் போய்விடுகிறது.

வாழ்க்கை இனிமையாக அமைய, எல்லாமும் உரிய காலத்தில் நடக்க முன்னோர் வழிபாடு செய்வது மிகவும் முக்கியம். தம் ஜாதகத்தில் பிதுர் சாபம், தோஷம் முதலியவை இருந்தாலும், இல்லாவிட்டாலும் முன்னோர் தோஷ நிவர்த்தி தலங்களை தரிசிக்க வேண்டும். முன்னோருக்கு செய்ய வேண்டிய நீர்க்கடன்களை தருதல் வேண்டும்.

ராமேஸ்வரம், திருவெண்காடு, திலதர்ப்பணபுரி, திருப்புட்குழி முதலிய தலங்களை தரிசிப்பது நல்லது.

திருமணத்தைத் தடுக்கும் சக்தியும், முடிக்கும் சக்தியும் குருவுக்கு உண்டு. குரு பார்வை இருந்தால் திருமணங்கள் எளிதில் முடியும். குருவின் அருள்பெற நவக்கிரக குரு தலங்களுக்கு சென்று வழிபடுவதும், குரு பரிகாரத்தை வீட்டில் செய்து கொள்வதும் பலன்களைக் கொடுக்கும்.

ராகு – கேது கிரகங்கள் திருமணத்தடையை தரக்கூடியவை. ராகு – கேதுக்குரியதலங்களான திருநாகேஸ்வரம், கீழப்பெரும்பள்ளம் ஆகிய தலங்களையும், இவ்விரண்டு கிரகங்களுக்குரிய பரிகார தலங்களான காளஹஸ்தி, திருப்பாம்புரம் ஆகிய தலங்களையும் தரிசிக்கலாம்.

நாக தோஷங்கள்கூட திருமணத் தடையை உருவாக்கக் கூடியவை. கால சர்ப்ப தோஷம் என்றொரு தோஷம் ஜாதக அமைப்பில் இருப்பதுண்டு. ஜாதகத்தில் ராகு – கேதுக்கள் அமைந்துள்ள ராசிகளுக்கிடையில் மற்ற கிரகங்கள் அனைத்தும் இருப்பது காலசர்ப்ப தோஷமாகும். இத்தகைய அமைப்பின் காரணமாகவும் திருமணத் தடைகள் நேரலாம். நாகதோஷ நிவர்த்தி தலங்களான திருநாகேஸ்வரம், குடந்தை திருநாகேஸ்வரம், நாகப்பட்டினம், திருப்பாம்புரம், நாகூர், திருப்பனந்தாள் முதலான தலங்களை தரிசிப்பதன் மூலம் தோஷநிவர்த்தி கிடைக்கும்.

ஜாதக ரீதியான வழிபாடுகளை மேற்கொண்டபின் குலதெய்வ வழிபாடு தவறாமல் செய்ய வேண்டும். குலதெய்வ வழிபாடு செய்து கொண்டபின் மற்ற தலங்களை தரிசிப்பது உரிய பலனை விரைவில் பெற்றுத் தரும். பரிகாரம் செய்து கொள்ளும் கோயிலில் உள்ள தரிசன முறையைத் தெரிந்து கொண்டு வழிபாடு செய்ய வேண்டும். மூலவர், அம்மன் முதலிய தெய்வங்களை தவறாமல் முறைப்படி வணங்க வேண்டும். பின்னரே பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். இதனால் தெய்வத்தின் அருளுடன் இனிய இல்லறம் அமையும்.

———

## இல்லற வாழ்க்கை செழிக்க

குடும்ப நலனை வேண்டாத தம்பதிகளே இவ்வுலகில் இல்லை. இம் மண்ணில் சக்திவாய்ந்த கோயில்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால் இல்லத்தையும், இல்லறத்தையும் காக்கும் விசேஷமான கோயில்கள் குறிப்பிடும்படியாக சில உண்டு.

இந்து மத வழிபாட்டில் குடும்ப நலம் காக்கும் வழிபாடுகள் நிறைய இருக்கின்றன. விரதங்கள் கடைபிடிப்பது, தோத்திரங்கள் சொல்வது, ஆராதனைகள் செய்வது என்று இல்லறம் காக்கும் வழிபாட்டு முறைகள் வழக்கில் உள்ளன.

குடும்பத்தில் தம்பதியரிடையே ஒற்றுமையும் பரஸ்பரமான வசீகரமும், ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பும் விரும்புபவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோட்டில் உள்ள அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலை நாடவேண்டும். இக்கோயில் பழமையான கோயில் மட்டுமல்ல, அற்புத சக்தி வாய்ந்த கோயில். எல்லோரும் தரிசிக்க வேண்டிய மிக முக்கியமான ஆலயம். இத்தெய்வத்தை வழிபட, வழிபட மேலும் மேலும் குடும்ப வாழ்க்கை சிறக்கும். இத்தெய்வத்தைப் போற்றி திருஞானசம்பந்தர்,

**"வெந்தன வெண்ணீறணிந்து விரிநூல்**
**திகழ்மார்பின் நல்ல**
**பந்தனவும் விரலாள் ஒருபாகம்**
**அமர்ந்தருளிக்**
**கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச்**
**செங்குன்றூர் நின்ற**
**அந்தணனைத் தொழுவார் அவலம்**
**அறுப்பாரே"**

என்று உருக்கமாக பாடியிருக்கிறார். இப்பாடலை நித்தமும் பாராயணம் செய்துவர இல்வாழ்க்கையில் பிரகாசம் மேலோங்கி நிற்கும்.

இதே போல் கும்பகோணத்திற்கு அருகில் சக்திமுற்றம் என்ற இடத்தில் சக்திவனேஸ்வர சுவாமி உறையும் திருக்கோயில் இருக்கிறது. இத்தலம் அம்பிகை தவம் செய்த புனிதமான இடமாகும். திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற சிறப்புக்குரியது இத்திருத்தலம். பாடல் பெற்ற தலங்களெல்லாம் அபரிமிதமான பலன்களைத் தரும் தலங்கள் என்பது நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயம்.

வைணவத் தலங்களில் முதன்மையானதாக போற்றப்படும் ஸ்ரீரங்கம் கோயில், சொற்களால் மதிப்பிடமுடியாத அளவுக்கு மகிமை வாய்ந்தது. ஜோதிட சாஸ்திரங்கள் இத்தலத்தை பரிகார தலமாகவும், இல்லற செழிப்பிற்குச் சிறந்த தலமாகவும் குறிப்பிட்டுச் சொல்கின்றன. இத்திருக்கோயில் தரிசனத்தால் எப்பேர்ப்பட்ட மனிதருக்கும் களத்திர யோகம் வலுப்பெறும்.

ஆந்திர மாநிலத்தில் சுருட்டப் பள்ளியில் உள்ள ஸ்ரீபள்ளி கொண்டீஸ்வரர் திருக்கோயிலும், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருநாவலூர் சிவன் கோயிலும் கூட அருமையான ஆலயங்கள் – விசேஷமான ஆலயங்கள். ஸ்ரீபள்ளிகொண்டீஸ்வரர் திருக்கோயிலை நாடினால் இல்லற வாழ்வில் தாம்பத்யம் சம்பந்தப்பட்ட சங்கடங்கள் நீங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகில் கருணையுள்ள தெய்வங்கள் ஆயிரமாயிரம் இருக்கின்றன. ஆனால் நம் வம்சத்தையும் குடும்ப சேமத்தையும் குறிக்கோளாய்க் கொண்டு நம்மை மிகுதியாக தாய்போல் அணுகி